# தென்னகத் தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 24—3—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 22





தமிழ் மாநிலத்தில் இந்திப் பரீட்சை கேலிக்கூத்தாகி விட்டது. ஆகையால் இந்தியில் பரீட்சை எழுதவேண்டியது அவசிய மில்லையென்றார் பக்தவத்சலம். இந்தியில் பரீட்சை எழுதவேண்டுமென்று பேசியிருக்கிறார் அமைச்சர் வெங்கட்ராமன்.

# பாட்டாளி தரும் சந்தாவில் வயிறு வளர்ப்போர்!

# பகைவனுக்கு வழிகாட்டி ஒதுங்கி நிற்போர்!

## இங்கு வாழும் இந்தியக் கம்யூனிஸ்டுகள்!



இந்தியக் கம்யூனிஸ்டுகள் இலட்சியவாதிகளல்ல; இரத்த வெறியர்கள் தான். இதனை உறுதிப்படுத்த அந்தக் கட்சியினர் நடத்தியிருக்கும் அமளிகள் ஏராளமாக இருக்கின்றன.

கம்யூனிச லட்சியத்திற்காக என்றைக்கும் அந்த எத்தர்கள் எந்தவகையான கிளர்ச்சிகளையும் இதுவரை நடத்தியதில்லை. சர்க்கார்களைக் கவிழ்ப்பது செங்கொடி சர்க்கார் அமைப்பதுதான் முயற்சியாகும். ஆயுதந்தாங்கிய போராட்டம் நடத்தியதுகாரல்மார்க்ஸ் காட்டிய கம்யூனிசத் தத்துவத்திற்காக அல்ல! வங்கத்திலிருந்து ஆந்திரா வரை, தெலுங்கானாவிலிருந்து தென்காசி வரை நடத்தப்பட்ட கிளர்ச்சிகளும் வேலைநிறுத்தங்களும் உலகத்துக்கெல்லாம் விளம்பரப்படுத்தப்படும் சோசலிச சோவியத் லட்சியத்துக்காக அல்ல! கட்சித் தலைவர்கள் கள்வர்களைப்போல் காடுகளில் மறைந்து கொண்டது தங்களைப் பிடிக்கவரும் காவல் துறை அதிகாரிகளைக் கொல்வதற்காகத்தான்! இதனை நமது கவனத்திற்குரிய கழுத்தறுப்புக் கட்சியினர் மறுக்க மாட்டார்கள். ஆனால் ஈரோட்டுப் பெரியாரின் தத்துப்பிள்ளையான ஒருமுப்பத்தெட்டு வயது மனிதர் தானும் உயிரோடு இருப்பதைக் காட்டிக் கொள்வதற்காக கம்யூனிஸ்டுகள் கொள்கைகளைக் காப்பதற்காகத்தான் அண்டர் கிரவுண்டுக்குள் போனதாக பேசியிருக்கிறார்.

தறுதலைகள் தேடிக்கொண்ட கட்சியின் தலைவனுக்குப் பழைய பேச்சுக்களை நினைவூட்டினால் கம்யூனிஸ்டுகள் இனிமேலும் மேடை போட்டுத்தூர மாட்டார்கள். கம்யூனிஸ்டு கட்சியினர் எத்தனை தடவை எங்கெங்கே பதுங்கினார்கள் எப்படியெல்லாம் புழுதியைத் துடைத்துக்கொண்டு மேடையேறித் தாங்கள் திருந்திவிட்டதாகச் சொன்னார்கள் என்பது ஒற்றை வாடை வீரருக்குத் தெரியும்.

கொள்கை குழப்பத்தாலே பல முறை அடிபட்டு வீழ்ந்து படுகாயப்பட்டவர்களை தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னதை வியாதியே வராத விசித்திரத் தலைவர் தற்போது மறந்துவிட்டார்.


அரசியல் தற்குறிகள் பலர் சேர்ந்து தேடிக்கொண்ட கட்சிக்குத் தன்னைத் தலைவனாகத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டு பவனி வரும்போது, கழுத்தறுப்புக் கட்சியினர் நாலணாவுக்கு வாங்கிப் போடும் ஒரு மாலைக்காகவே பேசுகிறார் என்பது எல்லோருக்கும் புரிகிறது. அதனால்தான் சகதிப் பத்திரிகை பெரிய விளம்பரத்தைத் தந்துவிட்டது. இப்படி தரங்கெட்ட தறுதலைகள் அரிவாள் கட்சியினருக்கு அருமை நண்பர்களாகிவிட்டனர்.

கால்ராவினால் செத்தபிணங்களைப்பற்றிக் கூடப் பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. ஆனால் சில அரசியல் நடைப் பிணங்களைப் பற்றிச் செய்தி வெளியிட எவரும் முன்வராத காரணத்தால் எதையும் உளறுவது என்று முடிவு செய்துவிட்டார்கள்.

இந்தியக்கம்யூனிஸ்ட்தோழர்கள் இரத்த வெறியாட்டம் போட்டதால் தான் தடைபோடப்பட்டது. சிறைகளுக்குள் தள்ளப்பட்டனர். தெலிங்கானாக் காம்ரேடுகள் செய்த கொலை கொள்ளைச் செயல்களுக்குத்தான் தூக்கிலிடப்பட்டனர். ரசாக்கர்களை எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அய்தராபாத் குடியான மக்களைத் தங்கள் அரிவாளுக்குப் பலியாக்கிக் கொண்ட செய்திகளைப் பழைய சிவஞானக் கிராமணிகூட கூறியிருக்கிறார்.

தெலிங்கானாவின் கிஸான் தலைவரும், ஆந்திர மகாசபையின் தலைவருமான எல்லா ரெட்டி என்ற கம்யூனிஸ்ட் பட்டினி நாடகம் நடத்தியதும் சிறைக்குள்ளே போக மறுத்துப் போலீஸ் நிலையத்திலேயே சண்டித்தனம் செய்ததும் சிவகாமிகளுக்குத் தெரியாத செய்தியாகும். எல்லா ரெட்டிகளும் அவர்தம் எடுபிடிகளும் என்ன செய்தார்கள்? கம்யூனிசமா பேசினார்கள்? லெனின் காட்டிய வழியிலா சென்றார்கள்? இல்லவேயில்லை. தங்கள் கட்சியைப் பிழைக்க வைப்பதற்காகப் பரிதாபத்துக்குரிய பாமர மக்களை, பயிர் செய்து பிழைத்தவர்களை நிலமெல்லாம் உங்களுக்கே சொந்தமென்று சொல்லிப் பலியிட்டுக் கொண்டார்கள்.

இரண்டாயிரம் கிராமங்களில் பத்துலட்சம் ஏகரா நிலத்தைப் பாழடித்து காங்கிரஸ் சர்க்காரைப் பகைத்துக்கொண்டனர்! தங்களது நாச வேலைகளைச் சட்டப்படி அனுமதிக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்தனர்.




ஏழைகள் மீது தாங்க முடியாத அளவு வரியை வாரிப்போட்ட மொரார்ஜிக்கு தாய்க்குலம் தரும் தனி மரியாதை.
('கல்கி' வெளியிட்டுள்ள கருத்துச் சித்திரம்)



இந்தியாவிலேயே வங்கத்துக்கு அடுத்தபடியாக ஆந்திராவைத்தான் கம்யூனிஸ்டுகள் தங்கள் சொந்த சொர்க்க பூமி என்றனர். அதனால் ஆசை அதிகப்படவே அகில இந்தியத் தலைமை அலுவலகத்தைக்கூட சென்னைக்கு மாற்றினார்கள். பம்பாய்க்குப் பதில் சென்னை என்று இடம் மாறியது. ஆனால் தமிழ்நாட்டு ஆட்கள் எவரும் தலைவராக முடியவில்லை. ராமமூர்த்தி முயற்சித்தபோதுகூட முழங்காலை முறித்துப் போட்டுவிட்டார்கள்! தெலிங்கானாவில் முரஹரிராவ், கோஸிலிங்கய்யா பாடங்கிலிங்கய்யா, முதலிய எட்டுக் கம்யூனிஸ்டுகள் மீது விசாரணை நடத்திய நல்லகொண்டா நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பண்ணை அடிமைத் தனத்தையும், முதலாளிகளையும் ஒழிப்பதற்காகக் கலகம் செய்த கம்யூனிஸ்டுகளுக்குச் சட்டப்படி தண்டனை விதிக்கப்பட்டது. மார்க்சின் மகத்தான லட்சியத்திற்காகப் போராடியிருந்தால் அறவழியில் சென்றிருந்தால், அடக்குமுறை வந்திருக்காது. நல்லகொண்டாத்துக்கு போன தலைவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தலைமறைவுத் தொண்டர்களைத் தூண்டிவிட்டார்கள். அது புதிய மனிதர்களைப்பயங்கரவாதிகளாக மாற்றிக் காட்டியது.

அய்தராபாத், நேரு – படேல் ஆட்சிக்கு உட்பட்டதால் அந்தப் பகுதி மக்கள் விடுதலை அடையவில்லை என்று அப்பட்டமான பொய்களைக் கூறிய பெரிய மனிதர்களைக்கழுத்தறுப்புக்கட்சியிலேதான் குடியிருந்தனர். இன்றைய தினம் காங்கிரசுக் கட்சியை எதிர்க்கமாட்டோம், தேர்தலில் போட்டியிட மாட்டோம் என்று பேசுகிற செங்கொடியின் செம்மல்கள், இட்லர், முசோலினி, சியாங்கேஷேக் முதலியோர் நடத்திய பயங்கரப் பாதையில் காங்கிரஸ் தலைவர்களும் செல்வதாக அச்சடித்துப் பரப்பினர்.

(8-ம் பக்கம் பார்க்க)




மலர் 1 | 24-3-63 | இதழ் 22

# உறுதிமொழி தருகிறார் நேரு ! உடைத்தெறிகிறார் சாஸ்திரி !

"ஆங்கில மொழிக்குப் பதில் இந்தி மொழியைப் படிப்படியாக ஆட்சி மொழி ஆக்க சட்டவரைவு உருவாக்கப்பட்டு விட்டது-இதைக் கூடிய விரைவில் அமைச்சரவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.''
—லால்பகதூர்சாஸ்திரி

"ஆங்கிலத்தின் இடத்திற்கு இந்தியைக் கொண்டுவருவது என்பதை ஏன் கூறினார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அதோடு மக்கள் மனதில் அரசாங்கம்-கொடுத்த வாக்குறுதியை மீறுமோ-என்ற சந்தேகத்தையும் விதைத்துள்ளார்.
—மெயில் ஏட்டின் தலையங்கம் 19-3-63

தென்னகத்து மக்களின் உணர்ச்சியோடு விளையாடிப்பார்ப்பது தில்லி அமைச்சரவையில் உள்ளவர்களுக்குப் பொழுது போக்காகி விட்டது.

அரிமாவின் வாலை நெரிப்பதும் அது ஆர்ப்பரித்தெழும் பொழுது ஓடி ஒளிந்து கொள்வதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

இந்தி மன்மதன் வேடமிட்டு வந்தாலும் சரி-மாகாளி உருவெடுத்து வந்தாலும் சரி திராவிடத்து மக்கள் அழகில் மயங்கியோ ஆர்பாட்டத்திற்குப் பயந்தோ இந்தியை எந்த நிலையிலும் வரவேற்கப்போவதில்லை. அந்த மொழியைத் திணிக்க முயற்சித்த போதெல்லாம் திரண்டெழுந்து போர்க்கொடி உயர்த்தியதை தில்லி அரசினர் மறந்திருக்க நியாயமில்லை.

தில்லியின் அசுரபலம் ஒரே ஒரு காரியத்தில் மட்டும் தென்னகத்து மக்களிடம் முழுமையாகத் தோற்றுப்போயிருக்கிறதென்றால் அது மொழித் திணிப்பு முயற்சியில்தான். இந்த உண்மையை முறையாக அரசியலைக் கவனித்துவரும் இந்திவெறியர்கள்கூட மறுக்க மாட்டார்கள்.

இந்தி மொழிக்குப் பலமான எதிர்ப்புக் காட்டும் தென்னகத்து மக்களிடையே அதை எந்த வழியிலாவது திணித்து அந்த வெற்றியைத் தன் மேனியிலே குத்திக்கொள்ள முயன்று மூக்கறுபட்ட வடக்கு வாழ் பெரிய மனிதர்கள் ஒருவரல்ல இருவரல்ல பட்டியலுக்கு வரிசையாக இருக்கிறார்கள்.

அந்த வரிசையில் இடம் பிடிக்கக் குதியாட்டம் போட்டுக் கொண்டு ஓடிவருகிறார் லால்பகதூர் சாஸ்திரி.

பண்டிதபந்த் அவர்கள் தந்த வாக்குறுதியை; அண்மையில் —வெகு அண்மையில்தான் பண்டிதநேரு மீண்டும் புதுபித்துக் கொடுத்தார்.

1965-க்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வகை செய்யும் மசோதாவை இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வர விடாதபடி இந்தி வெறியர்க்ள் முயற்சி செய்ததும், அது கேட்டு தென் மாநிலங்கள் கொதிப்படைந்ததும், தி மு. கழகத்தின் சார்பாக அறிஞர் அண்ணா அவர்கள் தில்லி அரசுக்கு எச்சரிக்கை விடுத்ததும்-அதன் பிறகு-"பண்டித பந்த் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகாப்பாற்றப்படும். 1965-க்குப்பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும். இதில் எந்த மாற்றமும் கிடையாது'' என்று பண்டித நேரு வாக்குறுதி கொடுத்ததும் முந்தாம்நாள் முடிந்து போன விவகாரங்கள்.

அதனால் ஏற்பட்ட பரபரப்புக்கூட இன்னும் சரியாக மறைந்துவிடவில்லை. அதற்குள் ஒரு குண்டைத்தூக்கிப்போடுகிறார் சாஸ்திரியார்.

ஆங்கில மொழிக்குப் பதில் இந்தி மொழியைப் படிப்படியாக ஆட்சிமொழியாக ஆக்க சட்டவரைவு உருவாக்கப்பட்டு விட்டதாம்.

உறுதி மொழி தருகிறார் நேரு. உடைத்தெறிகிறார் சாஸ்திரியார்.

நெருக்கடி நிலைமையில் இதை எதிர்க்கக் கூடாதாம். ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமாம். வேண்டுகோள் விடுக்கிறார் உள்துறை அமைச்சர்.

நெருக்கடி நேரத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இத்திக்குப் படிப்படியாக பாலிஷ் போட்டுக் கொண்டு வருகிறோம் என்பது நெருப்போடு விளையாடுவது போன்ற வேலையாகும்.

எத்தனையோ பிரச்சினைகளைச் சமாளித்துத் தீரவேண்டிய நெருக்கடியில் நாடு மாட்டிக்கொண்டு தவிக்கும் பொழுது இந்திச் சனியனை இழுத்து வைத்துக் கொண்டு விபரீதத்தை விலை கொடுத்து வாங்க வேண்டாமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறோம்—கூடவே எச்சரிக்கையும் செய்கிறோம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் கல்யாணத்திற்குப்பத்து நாள் லீவும் இருநூற்றி ஐம்பது ரூபாய்கடனும் கேட்டிருந்தான். விசுவாசமுள்ள வேலைக்காரன். இன்றைக்குப் பணம் தருவதாகச் சொல்லியிருந்தேன். போய் விட்டான்- கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' என்று கண்கலங்குவது போல பேசினார் வீரப்பர். இந்தச் சாகசம் அவர் பரம்பரைக்கே உடலில் ஊறிப்போன கலை.

திருமணநாளன்று கிராமமே அமர்க்களப்பட்டது. காரும் வண்டியும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு அலைந்தன. வீரப்பரின் மாளிகை ஜனசமுத்திரத்தில் மூழ்கிக் கிடந்தது. இன்னிசை, இரைச்சல், வாழ்த்து வரவேற்பு ஒரே ஆரவாரம். லட்சாதிபதி வீட்டுத்திருமணம் சாதாரணமாகவா இருக்கும். பிராமண போஜனம்—சூத்ராள் போஜனம் தனித்தனியாகநடைபெற்றுக் கொண்டிருந்தது. வேதஒலியிலும்புகை மண்டலத்திலும் அலங்கரிக்கப்பட்ட முகூர்த்த மண்டபம் திணறிக் கொண்டிருந்தது.

மணமக்களான - வளர்ப்பு மகள் சிவகாமியும், மணமகன் அரசு நம்பியும் அலங்கரிக்கப்பட்ட அழகு உருவங்களாக காரில் பவனி வந்தனர். மருதமுத்துவுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த பருவச்சிட்டு செங்காயி இந்த கல்யாண ஊர்வலத்தை பார்த்துக் கண்ணீர் வடித்தாள் என் வாழ்வை பறித்த பாவிகளே! நீங்க்ள் உருப்படுவீர்களா என்றுமனம் குமுறிச்சாபமிட்டாள்.

காஞ்சி காமகோட்டி திருமணத்தை சாஸ்திர முறைப்படி நடத்தி வைத்தார். அமைச்சர்கள், பிரமுகர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். மூன்று நாள் அமர்க்களத்திற்குப்பின் வீரப்பர் வீட்டுத் திருமண வைபவம் வெற்றிகரமாய் முடிந்தது!

கிராமத்து மக்கள் திருமண விழாவை வெறுப்போடு கண்டு களித்தனர். "என்னதான் வளர்ப்புச் செல்வியாக இருந்தாலும் இவ்வளவு ஆடம்பரமா' என்று கரித்துக் கொட்டினர்.

பெண்ணும் மாப்பிள்ளையும் மகிழ்ச்சியால் தளைத்து இணைந்துஆடி மகிழ்வதை வீரப்பர் கண்குளிரக் கண்டு ரசித்தார்.

தன் எண்ணம் போல திருமணத்தை முடித்து வைத்து விட்ட பூரிப்பில் வீரப்பர் தொழில் விஷயமாக வெளியூர் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்து பெண்ணின் உடல் நலத்தையும் பிள்ளையின் உடல்நலத்தையும் விசாரித்து வேலைக்கொரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் திடீரென ஏற்பட்ட புயலும் மழையும் அந்தக் கிராமத்தை நாசப்படுத்தி வைத்தது. கூரைக் குடிசைகள், தண்ணீரில் முழ்கிக் கிடந்தன. சில காரை வீடுகள் தரைமட்டமாகியிருந்தன. வீரப்பரின் தோட்டம் அலங்கோலமாகக் காட்யளித்தது.

இந்த நிலைமையை வீரப்பருக்கு எழுதியிருந்த அவர் மனைவி விசாலாட்சி ஒரு சோகச் செய்தியையும் அதோடு இணைத்திருந்தாள். அதைப் பார்த்ததும் வீரப்பர் மேனி புல்லரித்தது. முட்டிமோதிக் கொண்டு துடிதுடித்தார். உடனேகிராமத்திற்குப் புறப்பட்டார். வரும் வழியில்-பெண்ணும் மாப்பிள்ளையும் வெட்டிக் கொல்லப்பட்ட செய்தியை தலையாரிதானப்பன் அழமாட்டாத குறையாகச் சொன்னார். வீரப்பர் கண்களில் வடிந்த நீரைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டார். எல்லோரும் அவரைதுக்கம்விசாரிப்பதுபோலப் பார்த்தார்கள். சிலர் துணியால் வாயை மூடிக் கொண்டு உள்ளூரச் சிரித்துக் கொண்டார்கள்.

இந்த இழப்பு வீரப்பரைப் பெரிதும் வேதனைப்படுத்தியிருக்கும் என்பது விசாலாட்சிக்குத் தெரியும். அவரைக்கண்டதும் விம்மிப் பொறுமினாள். வீரப்பர் வாசற்படியில் நின்றபடியே வாய்விட்டுப் புலம்பினாள்.

"எதிர்பாராமல் நடந்து விட்டது. அவர்கள் இறந்தும்கூட நம் குடும்பத்துக்கு மிகவும் பயன்படுகிறார்கள். வருத்தப்படாமல் வாங்கப்பா'' என்று வெளிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கூப்பிட்டாள் அவர் அருமை மகள் சிவகாமி!

○

வெட்டுண்டு மாண்டுபோன தம்பதிகள் யார்?

ஊரார் வெறுப்புக்கும்-மருதமுத்துவின் சாவுக்கும் காரணமாயிருந்த மணமக்கள் யார்?

வீரப்பரின் அன்புக்குப் பாத்திரமான அந்தப் பெண்ணும் பிள்ளையும எவர்?

மணமக்கள் யார்? என்ற முடிவை விளக்கமாக சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். எங்களுக்குமுதலில் கிடைக்கும் சரியான முடிவுக்கு **ரூபாய் பத்து** அன்பளிப்பு வழங்கப்படும்.

—எழுதியவர் : **மல்லிகை**

# "சுதந்திர இந்தியாவில் லஞ்சம் வாங்கினால் தூக்கிலே போடுவோம்"

# செய்த முழக்கம் என்ன ஆயிற்று ? சிம்ம கர்ஜனை எங்கு போயிற்று ?

## பத்து லட்சம் வாங்கியிருக்கிறார் பட்நாயக் !

## லஞ்சம் ! ஊழல் ! விரயம் ! இதுதான் காங்கிரஸ் ஆட்சியா ?

இரு நூற்றி எழுபத்தைந்து கோடி ரூபாய்க்கு வரிப்போட்டிருக்கிறார்கள். அதில் பெரும்பாலும் ஏழை மக்களின் மடியில் கைவைத்துப் பிடுங்கும் வரிகள் தான் அதிகம்.

நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க, படை பலத்தைப்பெருக்கிக்கொள்ள இந்த வரிகளை தேசத்திற்காக மக்கள் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள் பெருந் தலைவர்கள்.

தேசத்திற்கு ஆபத்து வந்திருப்பது சரிதான் தியாகம் செய்ய நாட்டு மக்கள் கடமைப்பட்டவர்கள் என்பது உண்மை தான்.

ஆனால் பொறுப்புள்ளவர்கள், மக்களுக்கு தியாக சீலத்தை எடுத்துரைக்க வேண்டிய அமைச்சர்கள் செல்லுகின்ற பாதைமிகப் பயங்கரமாக இருக்கிறது.

சீனன் பேசுகின்ற நியாயம் புலி பேசுகின்ற வேதாந்தம் என்று தள்ளிவிடுகிறோம். அதே நிலைமையை இங்கு தேசபக்தி வேடம் போடுகின்ற அமைச்சர்களிடம் காண முடிகிறது.

அரசினர் நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளை அடைக்காமல் கஜானாவில் எவ்வளவு கொட்டினாலும் அது நிறையாது தேவைக்குப் பயன்படாது.

சட்டத்தால் மிரட்டி கொள்ளையடிப்பதுபோன்ற வரிகளைப் போடுகின்ற அரசினர் கொள்ளைபோவதைத் தடுத்து நிறுத்த இதுவரை கடுமையான நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை.

வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள பஞ்சை ஐம்பது காசு திருடிவிட்டால் கூட அவன் தண்டிக்கப்படுகிறான், நாகரிக சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறான்.

போலீஸ்காரர் ஒரு ரூபாய் லஞ்சம் வாங்கிவிட்டால் சட்டமன்றம் வரை கேள்வி வருகிறது. வேலையிலிருந்து நீக்கி வைக்கப்படுகிறார். அல்லது எச்சரிக்கை செய்யப்படுகிறார்.

ஆனால் ஒரிசா முதலமைச்சர் **பட்நாயக்** அவர்களிடம் கல்கத்தாவிலுள்ள மாங்கனீஸ் ஏற்றுமதி வியாபாரம் செய்யும் ஸிராஜுதின் கம்பெனியார் பத்து லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

எதற்கு தேசப்பாதுகாப்பு நிதிக்கா?

இல்லை!

தேசப் பாதுகாப்பு நிதிக்கென்றால் தான் மேடையமைத்துகூட்டத்தைக் கூட்டி விளம்பரம் செய்து கொடுத்திருப்பார்களே!

இந்தப் பத்து லட்சம் பட்னாயக் அவர்களிடம் அரவமின்றி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரிசா முதலமைச்சரும் இதுவரை வாயைத் திறக்கவில்லை. வாங்கியதை திருப்பியும் கொடுக்கவில்லை.

அப்படியானால் பட்நாயக் வாங்கியதற்குப் பெயர் லஞ்சமா? இல்லையென்றால் ஸிராஜுதின் கம்பெனியார் எதற்காகக் கொடுத்தார்கள்? அமைச்சர் ஏன் வாங்கினார்.

இந்தச் சந்தேகம்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது உண்மையா என்று அவர்கள் அந்தச் சபையில் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

"இப்படிப் பகிரங்கமாகப் புகார் சொல்லப்படுவது உண்மைதான். ஆனால் இதற்கு பதில் சொல்வது மிகவும் கஷ்டம்"—இப்படிப் பதில்சொல்லியிருக்கிறார் நிதியிலாகா உதவி மந்திரி **பகத்**.

ஸிராஜுதின் கம்பெனியார் ஒரிசா முதலமைச்சருக்கு மட்டும் கொடுக்கவில்லை. சில யூனியன் மந்திரிகளுக்கும் இப்படி வாரி வழங்கியிருக்கிறார்களாம். அதில் யார்யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அது இன்னும் வெளிவரவில்லை. அதுவும் ஒரு நாளைக்கு வெடித்து முச்சந்திக்கு வந்து நாற்றமெடுக்கத் தான் போகிறது.

ஸிராஜுதின் கம்பெனி இப்போது நீதிமன்றத்தில் நிற்கிறது. ஏன் தெரியுமா? பதினெட்டு லட்ச ரூபாய்க்கு மேல் வருமானவரி கட்டாமல் அரசினரை ஏமாற்றினார்களாம். அது மட்டுமா? அவர்களுக்கு வரும் வருமானத்தை மறைத்துதிருட்டுக் கணக்கெழுதினார்களாம். குற்றச்சாட்டு அதோடு நின்று விடுகிறதா? இல்லை! அந்நியச் செலாவணி விதிமுறைகளை மீறி மாங்கனீஸ் ஏற்றுமதி செய்தார்களாம்.

இத்தனை அயோக்கியத்தனங்களையும் ராஜதர்பாரோடு நடத்திக் கொண்டிருக்க—அரசாங்கத்தின் கண்களை குருடாக்க—பதவிச் சிம்மாதனத்தில் அமர்ந்திருக்கும் சிலருக்கு; மந்திகளுக்கு பொரியள்ளி வீசுவதைப்போல்—கடிக்க வரும் நாய்க்கு எலும்புத் துண்டை போடுவதைப் போல் அவ்வப்போது சில அர்ச்சனைகள் செய்து பதவித் தேவதைகளை கைப்பிடிக்குள் அடக்கி வைத்திருக்கிறார்கள் ஸிராஜுதின் கம்பெனியார்.

மண்ணெண்ணெய்க்குப் பத்துக்காசு வரிவிதித்து-தேசபக்தியை முன்னிட்டு இதைப் பொறுத்துக் கொள்ளுங்கள் **என்று** ஏழைகளைக் கசக்கிப் பிழிகிற மொரார்ஜி அரசின் நிர்வாகத்தில் முடை நாற்றமெடுத்து வரும் ஊழல் இது மட்டுமல்ல—

இதோ இன்னொன்று—

ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷனுக்குத் தர வேண்டிய ரூபாய் பதினேழு லட்சத்தை கான்பூர் தொழிலதிபர் ஒருவர் தராமல் ஏமாற்றினாராம். ஆயுள் இன்சூரன்ஸ் நிர்வாகம் அவர்மீது வழக்குத் தொடர்ந்ததாம். வழக்கின் தீர்ப்பு கார்ப்பொரேஷனுக்குச் சாதகமாய் இருந்தும் தொழிலதிபர் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் தவறிவிட்டதாம்.

இத்தோடு ஒழிகிறதா ஊழல் இல்லை! அது பட்டியலாக நீளுகிறது.

*1961-62-ம்* ஆண்டில் மட்டும் தபால்-தந்தி இலாகாவில் ரூபாய் *12* லட்சத்து *11* ஆயிரம் ரூபாய் கையாடல் நடந்திருக்கிறதாம்.

இத்தனை அக்கிரமங்களையும் வளர விட்டுக் கொண்டுதான், ஊதாறித்தனங்களுக்குக் கோபுரம் எழுப்பிக் கொண்டுதான் ஏழைகள் மீது வரிப் போட்டு தியாகம் செய்யுங்கள். எதிர்க்கிறீர்களே தேசபக்தி இல்லையா உங்களுக்கு என்று இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு பேசுகிறார்கள்.

"காங்கிரஸ் சுதந்திர சர்க்காரில் லஞ்சம் வாங்குபவர்கள் தூக்கிலே தொங்கவிடப்படுவார்கள்" என்ற முழக்கம் என்னவாயிற்று. முதலாளிகளின் பாதங்களிலே சரணடைந்து விட்டதா?

**ரஷ்யாவில் ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கியதற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டார்** என்ற செய்தி வந்ததே அது இந்த அரசினருக்கு நினைவிருக்கிறதா?

இங்கே அமைச்சர்கள் அந்தக் கேவலமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு விசாரணை இல்லை! தீர்ப்பில்லை தண்டனையில்லை.

ஊழல் வளருகிறது. அரசு ஏமாற்றப்படுகிறது. பணம் கோடிக்கணக்கில் கொள்ளை போகிறது விரயமாகிறது.

அதைக் கட்டுப்படுத்தினால், கடும் நடவடிக்கை எடுத்தால்— மண்ணெண்ணெய்க்கு வரிப் போட வேண்டிய அவசியம் வராது.

லஞ்ச ஊழலைத் தடுத்து நிறுத்துங்கள். கொள்ளை போவதை இழுத்துப்பிடியுங்கள். நல்ல நிர்வாகத்தின் மூலம் விரயமாவதை கட்டுப்படுத்துங்கள். ஏழைகள் வீட்டில் விளக்கெரிய வழி செய்யுங்கள்.

பட்நாயக் போன்றவர்கள் வளருவார்களானால் தேசபக்தி வளராது அது தீயும்! தீயும்!


**விரைவில் ஆரம்பமாகிறது!**

**'தென்னகத் தலைவ'னில் தேன்சுவை தொடர்கதை**

❋ பண்பையும், பேசும் மொழியையும் காப்பது
கணவனா, மனைவியா?

இதை நிறுத்துக் காட்டும் நெடுங்கதை

**"ஒரு கொடியில் இரு மலர்கள்"**

**எஸ். எஸ். தென்னரசு எழுதுகிறார்.**

படிக்கத் தவறாதீர்கள்!

### குடியரசுக் கொள்கைப்படி-

# பிரிவினை பேச உரிமை உண்டு

## ‘தேவநேயப் பாவாணர்’ தரும் தெளிந்த கருத்து!

எங்குப் பிரிவினை பற்றிப் பேசப் பெறுகின்றதோ, அங்குப் பிரிவினைக்குத் தக்க பொருட்டுகள் இருக்கும் என்பதையும், எங்குப்பிரிவினைக்குத் தடையிருக்கின்றதோ அங்கு விடுதலை வேட்கை மிகும் என்பதையும், வெள்ளையர் ஆட்சியிலும் அதை எதிர்த்துத் தன்னாட்சி நிறுவிய பேராயக் (Congress) கட்சி வரலாற்றிலும் இன்னும் பிற உலக நிகழ்ச்சிகளிலும் நாம் தெளிவாகக் கண்டோம்.

எங்கும் பிரிந்து போக விரும்புவார் சிறுபான்மையராக விருப்பதையும், பிரிந்துபோகத் தடை யிடுவார் பெரும்பான்மையராக விருப்பதையும் நாம் அறிவோம். இப் பெரும்பான்மையரிடமிருந்து சிறுபான்மையினர் பிரிந்துபோக விரும்புவது ஏன்? இதற்கு வெறும் உணர்ச்சியும், மேலோட்டமான எண்ணமும், சட்ட திட்டங்களின் வலிந்த கட்டுக்காவல்களால் தகர்த்தெறியத் தக்க காரணங்களுமே அடிப்படையாக விருக்கமுடியாது. பெருத்த அரசியல், வரலாற்று, மொழி, பண்பாட்டு அடிப்படையிலேயே ஒரு சாரார்க்கு விடுதலை வேட்கை பிறக்கும். அவை பொருட்டே ஒரு கூட்டம் அவ்விடுதலை வேட்கையைத் தடுக்க முயற்சி செய்யும்.

உலகியல் முறைப்படி ஒருவர் பிரிவு கேட்பதோ, இன்னொருவர் அதைத் தடுத்து ஒற்றுமையை வலியுறுத்துவதோ குற்றமாகாது. ஆனால் விடுதலை வேட்கையினர் தாறுமாறான வழிகளில் அதனை வற்புறுத்துவதோ, ஒற்றுமை விரும்புவார் ஆணை, அடக்கு முறைகளால் இதனைத் தடுக்க முயல்வதோதான் தமக்கும் நாட்டுக்கும் சொல்லொணாக் கேடுகளைப் பயக்கும்.

அண்மையில் இந்திய அரசியலார் கொண்டுவர விருக்கும் பிரிவினைத் தடைச் சட்டம், எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் இந்தியா பற்பல வகையில் பிளவுண்டு போகும் என்பதற்கே அடிப்படையாகுமன்றி, அதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சிக்குக் கட்டாயம் வழி வகுக்காது.

குடியரசு அமைப்பு முறையின் முழு முதல் அடிப்படைச் சிறப்பு என்னவென்றால், எல்லாக் குடிமக்களின்-அன்றிக் குடி மக்களில் ஒரு சிலரின் அவ்வப்பொழுதைய உரிமைக் குரலுக்குச் செவி சாய்ப்பதே ஆகும். அவ்வுரிமைக் குரல் எழுப்பப்படுகையில் அதற்குச் சரியான வகையில் அமைவு கூறி அதனைத் தணிக்க முயல்வதே குடியரசு முறையைக் கட்டிக்காக்க விரும்புவார் செய்ய வேண்டிய செயலாம். அஃதன்றிக் குடி மக்கள் சிலரால் எழுப்பப்பெறும் உரிமை வேட்கையின் குரல் வளையை அழுத்தி நெரித்து அக்குரலெழாமல் தடுக்கும் குடியரசைவிட, தன் விரும்பம்போல் மக்களை அலைக்கழித்து அச்சுறுத்தித், தன் வலிந்த கைகளால் மெலிந்த குரலெழுப்பும் மக்களைத் தடுத்து வன்மம் புரியும் முடியரசே நூறு மடங்கு மேலாம்.

இந்தியப் பேராயக் கட்சியின் ஆளுநர், அண்டை நாட்டாரொடு எல்லைப் போரிட்டுக் கொண்டிருக்கும் இதே பொழுதில், எவ்வகையிலும் தமக்குத் தொல்லைதராத-மாறாகத் துணை புரிகின்ற ஒரு சார் மக்கள், தாம் பின்னர் எழுப்பப் போவதாகக் கூறும் விடுதலைக் குரலுக்கு அணையிட முயன்று, அவர் தம்வெறுப்புக்கும், பகைக்கும் ஆளாகின், அந்நிலை எத்துணைப் பெருந் தீங்கை விளைவிக்கும் என்று நாம் கூறற்கியலாது.

இப் பொது நிலைகளை ஒருவாறு விடுத்துப் பிரிவினைக்குரிய சிறப்பு நிலைகளை ஒரு சிறிது பார்ப்போம்.

இந்திய அரசினர் இப் பிரிவினைத் தடைச் சட்டத்தை விரைந்து கொண்டுவரும் இந்நிலைக்குத் தமிழ்நாட்டில் அன்று தொட்டிருந்து வரும் விடுதலையுணர்வே தலையாய காரணமாக விருக்க முடியும். அண்மையில் நடந்த தேர்தலில் பெருமளவில் மக்கள் துணையைப் பெற்று மாநில அரசவையிலும, நடுவன் அரசவையிலும் ஒரு நல்லிடத்தைக் கைக்கொண்ட தென்னக விடுதலைக் கட்சி ஒன்றின் நிலை வலுத்த பின்பு, இத் தடைச் சட்டம் கொண்டுவரப் படுவதே, இதனை வலியுறுத்திக் காட்டும்.

தமிழ் நாட்டு மக்கள் ஒரு சிலர்க்கு உடன்பாடற்றவையாக இத் தென்னக விடுதலைக் கட்சிக் கொள்கைகள் இருந்தாலும், அக்கட்சிக்கு அடிப்படையான தமிழக விடுதலை தலை யுணர்வையும், வரலாற்று உண்மையையும், எவரும் மதியாது புறக்கணித்து விடல் முடியாது. ஓரளவிற்கு அந்தக் கட்சியின் உணர்வு, தமிழர் தம் உள்ளத்துக் கனல் விட்டுக் கொண்டிருக்கும் உரிமை உணர்வே என்று கூறுவதானாலும் அது மிகையாகாது,

இவ்விடுதலை உணர்வு இன்று நேற்று ஏற்பட்டதா? அன்றி வெள்ளையரை எதிர்த்துப் பொருதிக் காலக் கோளாறுகளால் தன்னாட்சியை மறை

(10-ம் பக்கம் பார்க்க)



### என்ன வக்கீல்? இது கூடத் தெரியவில்லையே உட்காரும்!

சட்ட மன்றத்தில் அரிஜன நலமான்ய கோரிக்கை மீது கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசிக்கொண்டு வரும் பொழுது “அரிஜனங்களுக்குக் கோவில்களைத் திறத்து விட்டாலும் ஆண்டவனுக்கு ஆராதனை, அபிஷேகம் செய்ய அவர்களுக்கு உரிமை இல்லையே!” என்று கூறிக் கொண்டிருக்கும்பொழுது, அனந்தநாயகி குறுக்கிட்டு “கோயிலுக்கே போகாத ஒருவருக்கு, கோயிலில் அரிஜனங்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை என்பது எப்படித் தெரியும்” என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

உடனே சபாநாயகர் குறுக்கிட்டு “இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல: அனந்தநாயகி சட்டம் படித்த வக்கீலாயிருந்தும் ஒழுங்குப் பிரச்சினை என்றால் என்னவென்று தெரியவில்லையே” என்றார். மறுபடியும் அனந்தநாயகி ஏதோ சொல்ல முயன்றபோது சபாநாயகர் பலமாக மணியடித்து உட்காரச் சொன்னார்.






**அமைச்சருக்கு மாலை போட்டு வரவேற்பேன். பேராசிரியர் க. அன்பழகன் கருத்துரை.**

“அன்றாடச் செலவினம் இவ்வளவு குறைந்திருக்கிறது. செலவு குறைந்து வருமானம் பெருகி இருக்கிற காரணத்தால் மக்கள் இல்லங்களில் நிம்மதி ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிவிக்கப்பட வேண்டும் ஆனல் ஆளுங்கட்சி உறுப்பினர்களோ ஏழை வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கு எதற்கு என்று கேட்பவர்களாகவே இருக்கிருர்கள் இவர்கள் நினைப்புத் தவறு.

ஏழை மக்களுக்குத்தான் மண்ணெண்ணெய் விளக்குத் தேவைப்படுகிறது. இவர்கள் பேசுவதைப் பார்த்தால் ஏழைகள் வீட்டில் எரிகிற நாடா விளக்கு பசும் நெய்யால் எரிகிறது என்று எண்ணிக்கொண்டுள்ளார்களோ? என்று கூட நான் நினைக்கிறேன். சிலருடைய பேச்சிலிருந்து அப்படிப்பட்ட எண்ணம் இன்றைக்குத் தோன்றுகிறது.

அரசாங்கம் வரி வாங்காமல் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பவன் அல்லன் நான். அவ்வாறு யாரும் எதிர்பார்க்கவும் கூடாது. ஆனல் உயருகிற வரிகள் இருக்கிற காரணத்தால் அதாவது, வளருகிற வரிகளை ஏற்கனவே விதித்திருப்பதால் கிடைக்கக் கூடிய வருமானத்தால் இன்றைய தினம் புதிய வரி விதிக்கவேண்டிய அவசியமில்லை.

ஆகவே மக்களைப் பாதிக்கிற வரிகளில் ஏதாவது ஒன்றை அமைச்சர் அவர்கள் எடுத்துவிட்டு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இன்ன வரியைக் குறைத்திருக்கிறேன், இதற்குப் போட்டிருந்த விற்பனை வரியை விலக்கி இருக்கிறேன் என்று கூறி இருந்தால் நான் ஏதும் பேசாமலே அமைச்சர் அவர்களுக்கு ஒரு மாலைபோடுகிறேன் என்று போட்டுவிட்டு அமர்ந்திருப்பேன் !”

**தில்லியில் ‘சரணம்’ அடையும் தமிழக அமைச்சர்கள்!**

**கலைஞர் கருணாநிதி சூடு**

“எனக்கு முன் பேசிய குழந்தையம்மாள் அவர்கள் கோவை வட்டத்தில் தொழில் வளர்ச்சி கொஞ்சம் ஏற்பட்டாலும் தற்போது மந்தநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறினர்கள். ஆனல் நாங்கள் மாநில அளவில் அந்த மந்தநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறோம். தி. மு. கழகம் நீண்ட நெடுங்காலமாக இத்தகைய மந்த நிலையைச் சுட்டிக்காட்டி தெற்கு தேய்வதேன்? வடக்கு வளர்வதேன்? என்ற கேள்வியை எழுப்பி வருகிறது.



இதைப்பற்றி ஆளும் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் மாதா கவுடர் பழைய பல்லவி என்று குறிப்பிட்டு, எங்கள் தோழர் மதியழகன் பேசியதை அனுபல்லவி என்று கூறினர். நாங்கள் பல்லவியைத் தொடங்கி அநுபல்லவியில் நின்றாலும், இங்குள்ள அமைச்சர்கள் தில்லி செல்லுகின்ற வேளையிலெல்லாம் ‘சரணம்’ அடைகிற நிலையில் இருக்கிருர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. தொழில் துறையின் பிற்பட்ட பகுதியாய் உள்ள நமது தமிழகத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தினல் தான் வடக்கு-தெற்கு என்று பேசிகிறோமே தவிர வடக்கு என்ற திசைமீதே எங்களுக்கு வெறுப்பு என்று யாரும் பொருள் கொள்ளவேண்டியதில்லை. இந்தப் பிரச்சினை பிரதேச ஏற்றத் தாழ்வுகளில் ஏற்படும் பிரச்சினையே தவிர வெறும் திசையைப் பற்றிய பிரச்சினை அல்ல.

பின் தங்கிக் கிடக்கும் பகுதிகள் முன்னேற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் தான் இதைச் சொல்லுகிறோம்.



**கழுத்தை நெறித்த காங்கிரசார் கண்ணைக் குத்தாமல் விட்ட அதிசயம். இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். பேச்சு**

எதிர்கட்சி உறுப்பினர்கள் வைத்த கருத்துகளிலே திட்டவட்டமான சொற்களையும்புள்ளி விவரத்தோடு கூடிய ஆதாரங்களையும் சுட்டிக்காட்டி இங்கே கூறியிருக்கிருர்கள். கனம் அங்கத்தினர் ஒருவர் நேற்றுப் பேசுகிற நேரத்தில் ‘திராவிடமே மூச்சு என்று கூறியவர்கள் மூச்சை விட்டு விட்டார்கள். ஆனல் இந்த அறிக்கையை பலமாக எதிர்க்கிருர்கள். நெருக்கடி நேரத்தில் இப்படி எதிர்க்கிருர்களே” என்று மெத்த வருத்தப்பட்டுக்கொண்டார். நெருக்கடி என்ற வார்த்தையை எது எதற்குத்தான் பயன் படுத்துவார்களோ எனக்குத் தெரியவில்லை.

சட்டமன்றத்தைக் கூட்டி வைத்து நீண்ட அறிக்கையைப் படித்து விவாதத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்து பிறகு இதைப்பற்றி குறை கூறுவதைக் கண்டிப்பது ஒரு புதுவிதமான ஜனநாயகம் போலும். இந்த வகையில் சரியில்லாத அறிக்கையை எதிர்க்கட்சித் தலைவரோடு நானும் சேர்ந்து பாராட்டுகிறேன். நன்றி தெரிவிக்கிறேன். எப்படி நன்றி என்ருல் எத்தகைய பாராட்டு என்ருல் டில்லி அமைச்சர் தாங்க முடியாத அளவுக்கு வரியைச் சுமத்தி விட்டபோது நாங்கள் வரிபோடவில்லை என்று சொன்ஞல் அதை அந்த அளவுக்குப் பாராட்ட வேண்டியதுதான். உதாரணமாக டில்லிவரி கழுத்தைப்பிடித்து பலமாக திருகிக் கொண்டிருக்கும் நேரத்தில் நான் கண்ணை குத்தாமல் விட்டு விட்டேன் பார்த்தீர்களாஎன்று சொன்ஞல் அந்த அளவுக்குப் பாராட்ட வேண்டியதுதான்.

## ஊளையிடும் ஊர்வசிகள்!

“தேசப் பற்று மிகுந்த தியாகப் பாரம் பரியம் கம்யூனிஸ்ட் பாரம்பரியம்.”

— பாலதண்டாயுதம்

“எங்கள் தேசபக்தி எவர் தேசப்பக்திக்கும் குறைந்ததல்ல. புடம் போட்டு எடுக்கப்பட்ட தியாகத் திருவிளக்குகள் கம்யூனிஸ்டுகள்.”

— முருகானந்தம்

“எங்கள் கட்சி வளர்த்த தியாகத் தீயில் குளிர் காய்ந்தவர்கள்...... கம்யூனிஸ்ட் கட்சியின் தேசபக்தி மிகுந்த தீர்மானத்தை நேருவே பாராட்டினர்.”

— ஜெயகாந்தன்

இப்பொழுது கம்யூனிஸ்டுகள் மூச்சுவிட மறந்தாலும் தங்களைத் தேசபக்தி மிகுந்த வீரர்கள் என்று சொல்லிக் கொள்ள மறப்பதில்லை. எந்தப் பத்தினிப் பெண்ணும் “நான் பத்தினி, நான் பத்தினி” என்று தாலியைத் தூக்கிக்காட்டி தமுக்குப் போட்டுக்கொண்டு திரியமாட்டாள். துட்டுத் தந்தவனுக்குத் துயில் விரிக்கும் பொதுவுடமைச் சிங்காரிகள்தான் தன்னை உத்தமி என்று வீதி சிரிக்க விளக்கிக்கொண்டிருப்பாள். கம்யூனிஸ்டு ஊர்வசிகள் இரண்டாவது ரகம் போலும். அதனல்தான் தங்கள் தேச பக்தியை ஊர்கூட்டிச் சொல்லி ஊளையிட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

பரிசுச் சிறுகதை

# திருமணம்

*இப்படி ஒரு திருமணம் நடைபெறுமா என்று கேள்விக்குறி எழுப்புமுன் சொல்லிவிடுகிறேன். இது நடந்த கதை! பெண்ணும், மாப்பிள்ளையுந்தான் கேள்விக்குரியவர்கள். பாவம்! திருமணம் முடிந்த சில மாதங்களில் தம்பதிகள் வெட்டுண்டு மாண்டார்கள். இது சோகச் சம்பவம்தான். ஆனால் இதைக் கேள்விப்பட்டு கண்ணீர்வடிக்க வேண்டிய ஊர் மக்கள் வாய் விட்டுச் சிரித்தார்கள்! ஏன்?*

**கதையைப் படித்துவிட்டு முடிவைச் சுருக்கமாக எழுதுங்கள். முதலில் எங்களுக்குக் கிடைக்கும் சரியான முடிவுக்கு ரூபாய் பத்து அன்பளிப்புத் தரப்படும்.**

வெண்கல மணி வீரப்ப செட்டியார் வீடு அமளியில் ஆரவாரத்தில் மிதந்துகொண்டிருந்தது. மூன்று தலை முறைகளுக்கு முன்னால் அந்தக் கிராமத்திலுள்ள தும்பிக்கை ஒடிந்த விநாயகர் கோவிலுக்கு வீரப்ப செட்டியாரின் பாட்டனார் முப்பது ரூபாய் செலவில் ஒரு வெண்கல மணி வாங்கிக் கட்டி வைத்தாராம். அந்தத் தியாகச் செயலை அவர் சந்ததியினர் சும்மாவிட்டு விடுவதாக இல்லை. வெண்கல மணிப் பிரதாபத்தை தங்கள் பரம்பரையோடு இழுத்துக் கொண்டே வந்தார்கள்.

வெறும் புகழுக்கு வீங்கிப் போன சந்ததியிலே ஊறி வந்த வீரப்பர், இந்தத் திருமணத்தை லட்ச ரூபாய் செலவில் நடத்திப் பார்க்கத் திட்டமிட்டிருந்தார்.

வீரப்பரின் மனைவி விசாலாட்சிக்கு இந்தத் திருமணத்தில் கொஞ்சம் கூட விருப்பமில்லை. எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் கண்ணைக் கசக்கிக்கொண்டு திரிந்தாள்.

'ஏன் இப்படி அழுது வடியறே? - பெண்ணுக்கும் பிள்ளைக்கும் என்ன குறைச்சல்? எனக்குப் பிடிச்சிருக்கு நான்செய்யிறேன்! உனக்கு விருப்பமில்லேன்னா நாலு பேருக்கு முன்னாலே நலுங்கு வைக்காமே மாடிக்குப் போயி மறைஞ்சு கெட!"

விசாலாட்சி எந்தவித மாறுதலுமின்றி பெருவிரலால் தரையைத் தடவிக்கொண்டு நின்றாள்.

"காலாகாலத்திலே கல்யாணத்தைப் பண்ணி கண்குளிரப் பார்க்காமே வளரவிட்டுகிட்டே இருந்தா நமக்கு நல்லா இருக்கா? பருவம் போன பிறகு கல்யாணம் பண்ணி என்ன பிரயோஜனம் நீயே சொல்லு?"

நூறு சுருதியில் வாயைத் திறந்த வீரப்பர் பத்துசுருதிக்கு இறங்கி அமைதியாகப் பேசினார். விசாலாட்சி அவருக்கு வாழ்க்கைப்பட்ட இந்தப் பதினெட்டு வருடங்களில் ஒரு நாள் கூட அவர் இப்படிக் கடுகடுப்பாகப் பேசியதில்லை. வீரப்பரின் குழந்தை சுபாவத்தைப் புரிந்து கொண்ட விசாலாட்சி மெல்ல உதடு நெளியப் பதில் சொன்னாள்!

"எனக்கு மட்டுமா பிடிக்கல்லே உங்க பொண்ணுக்குந் தான் இஷ்டமில்லை!- அதோ வர்ரா அவளையே கேட்டுப் பாருங்க!-"

"அம்மா! மாடியில் நின்று கொண்டு எல்லாம் கேட்டுக் கொண்டுதானிருந்தேன்" என்று பின்னிவிட்ட கூந்தலை விரலில் சுழற்றிக் கொண்டே முன்னழகு பார்த்தபடி பட்டுப் பூச்சியைப் போல் ஊர்ந்து வந்து நின்றாள் சிவகாமி.

"எம் பொண்ணு என் இஷ்டத்துக்கு விரோதமா ஒருக்காலும் பேசாது இல்லியாம்மா?" வீரப்பர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே பேசினார்.

"நீங்க தான் ஜாதகப் பொருத்தமெல்லாம் பார்த்து தேதி கூட நிச்சயம் பண்ணிட்டீங்களேப்பா! இனி எனக்கு இஷ்டமில்லேன்னா மட்டும் இந்தக் கல்யாணம் நின்னு போயிடுமா? ஆனா கல்யாணத்துக்கு லட்சக் கணக்கிலே பணத்தை வாரி இறைக்கறதுதான் எனக்குப் பிடிக்கலே. ஆடம்பரமில்லாம நடத்தினா நம்ம அந்தஸ்து ஒன்னும் குறைஞ்சு போயிடாது. இந்தக் கிராமத்திலே ஒரு ஆஸ்பத்திரி இல்லாமே மக்கள் ரொம்ப கஷ்டப் படுறாங்க. ஐம்பதாயிரம் ரூபா செலவு செய்து ஆஸ்பத்திரி கட்டினா ஏழை மக்களுக்கு ரொம்பப் பயன்படும். அதுக்கு சிவகாமி மருத்துவமனையின்னு கூட பேரு வச்சுடலாம். உங்க மனசுக்கும் திருப்தியாயிருக்கும். எனக்கும் அதிலே தான் மனப்பூர்வமான மகிழ்ச்சி. பிணிதீர்த்து வைத்த பெரியவர்ன்னு ஏழைங்க உங்களை கையெடுத்து வணங்குவாங்க" என்று சிவகாமி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்தாள்.

"சிவகாமி நீ, பேசறது ரேடியோவிலே நாடகம் கேக்கறது மாதிரி நல்லாத்தான் இருக்கு! ஆனா அதுக்கெல்லாம் எம்மனசு ஒத்துக்கணுமே; சிவா! இங்கே பாரும்மா இது வரையிலும் எழுபதினாயிரம் ரூபா செலவுசெய்து எல்லா ஏற்பாடும் செய்திட்டேன், மூனு நாளைக்கு நம்ம கிராமமே தூள் பறக்கனும். காருகுறிச்சிநாதஸ்வரம், மதுரை மணிபாட்டு, எம். எஸ். கூடவரலாம். நாட்டியத்துக்கு மட்டும் இருபதாயிரம்: விகடக்கச்சேரி, கதாகாலக்ஷேபம், கிராமத்து ஜனங்களுக்கும் பிடிக்கிறமாதிரி பொய்க்கால் குதிரை, நையாண்டிமேளம், கரகாட்டம், ஐயாயிரத்திலே வாண வேடிக்கைக்கு ஏற்பாடு செய்திருக்கேன். கல்யாணத்தை சாஸ்திர சம்பிரதாய முறைப்படி செய்து வைப்பவர் யார் தெரியுமோ? காஞ்சி காமகோட்டி சங்கராச்சாரிய சுவாமியாள்" என்று பட்டியலை அடுக்கி விட்டுபெருமிதத்தோடு பெரு மூச்சு விட்டார் வீரப்பர்.

உதட்டைப் பிதுக்கி வக்கணை காட்டிவிட்டுக் காரை எடுத்துக் கொண்டு சிநேகிதி வீட்டுக்குப் புறப்பட்டாள் சிவகாமி.

வீரப்பர் பணியாட்களைக் கூப்பிட்டு ஆளுக்கொரு உத்தரவுகளைப் போட்டு வேலைகளை வேகமாக முடிக்கும்படி கடுகடுத்துக் கொண்டார். "டெல்லியிலேருந்து மந்திரியெல்லாம் வர்ராங்க, ஒரு குறையும் ஏற்படக் கூடாது கவனமாயிருக்கணும்" என்று கணக்குப் பிள்ளைக்கு எச்சரிக்கை செய்தார். தொலைபேசியை கையிலெடுத்து அதில் சில விவகாரங்களை முடித்துக் கொண்டு பந்தல் அலங்காரங்களைக் கவனிக்கத் தோட்டத்திற்குள் நுழைந்தார்.

அங்கே அவர் வருகையை எதிர்பார்த்து வண்டிக்கார மருதமுத்து காத்துக் கிடந்தான்.

"என்னடா மருதா அரிசிமூட்டையை இறக்கிட்டியா? காய்கறித் தோட்டத்துக்குப் போனியா? தலையாரி என்ன சொன்னார்?" வீரப்பர் கேள்விகளை அடுக்கினார்.

அவன் ஒவ்வொன்றுக்கும் அவர் மனம் திருப்தியடைகிற அளவில் பதில் சொல்லிவிட்டு பிடரியைச் சொரிந்துகொண்டு நின்றான்.

"என்னடா என்ன வேணும்" அவன் சொல்லுவதற்குத் தயங்கினான்.

"என்னடா பல்லைக் காட்றே விஷயம் என்ன சொல்லித் தொலை" வீரப்பர் படபடத்தார்.

"எனக்குவர்றதிங்கட்கிழமை கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்காங்க......"

"திங்கட்கிழமையா? இங்கேயும் அன்னைக்குத்தானடா கல்யாணம். பத்து வருஷமா வண்டி ஓட்டிப் பழக்கப்பட்ட நீ இல்லாம கிராமங்களுக்கெல்லாம் யார்டா போய் வர்றது?

(10-ம் பக்கம் பார்க்க)

## ஜெயகாந்தா- யாரையடா சொன்னாய்? அடா!

"கம்யூனிஸ்டுகள் பேச்சு, பாஷை புரியவில்லை என்கிறார் அண்ணாதுரை. தேசத்துரோகப் பரம்பரையில் வந்தகடைசி எட்டப்பன் அண்ணாதுரைக்குப் புரியாதது ஆச்சரியமில்லைதான்!"

— ஜெயகாந்தன்
ஜனசக்தி - 17-3-63.

**அட எட்டேகால் லட்சணமே!** காட்டிக்கொடுத்துக் கைக்கூலி பெறும் கீழ்த்தர கடை கெட்ட ஜென்மங்கள் நிறைந்தது உன் பாரம்பரியம். **அட எமனேறும் பரியே!** சீனனின் சின்னத்தனமான செயலுக்கு ஆதரவாய் தீர்மானம் போட்டது உனது வங்கக் கம்யூனிஸ்ட் கட்சி! **அட கூரையில்லா வீடே!** நேருவை ஆதரிப்பதா? சீனனை ஆதரிப்பதா? என்ற சர்ச்சையில் பதவியையே விட்டெறிந்துவிட்டு ஓடிப்போன பச்சைப் பத்தினி நம்பூதிரிபாத் உனது கூடாரத்தில். **அட குலராமன் தூதுவனே!** சீனனுக்கு ஒற்றனாய்க் காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்களாய் திரிந்தீர்கள் என்று அரசு சிறையிலே தள்ளிப் பூட்டியது உங்களைத்தான். உண்மை அப்படியிருக்க நாகூசாது எட்டப்பனென்று யாரையடா சொன்னாய்? அடா!



# நான் நினைத்தால் டெல்லி மந்திரியாக முடியும்!

பிரிந்து போனால் கெடுதி, தப்பு, ஆபத்து இருந்தால் அதை எங்களுக்குச் சொல்லட்டும். அதை அரசாங்கமும் சொல்லுவதில்லை, மற்றவர்களும் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி "பிரிவினை தப்பு" என்கிறது. எல்லோருமே பிரிவினை கேட்பது தப்பு என்று மிரட்டிய படி சொல்லுகிறார்கள்.

நாங்கள் பிரிவினை கேட்பதால் கெடுதி என்ன? ஒன்றாக இருப்பதால் லாபம் என்ன? தமிழ் நாட்டை சந்தையாக ஆக்கி அதை அரசாள வடநாட்டினர் நினைக்கிறார்கள். இந்தத் திட்டத்துடன் பிரிவினை எதிர்ப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்றாக இருப்பதால் கஷ்டம் தொல்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். ஏன் பிரியக் கூடாது? பிரிந்து போவதால் என்ன கஷ்டம்? 645 ராஜாக்களை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரன் ஆட்சி நடத்தவில்லையா? என்ன வந்துவிட்டது?

நீயும் நானும் ஒன்றாக இருக்க என்ன அவசியம் இருக்கிறது? எந்த விதத்தில் நமக்குள் ஒற்றுமை இருக்கிறது? ஐரோப்பாவில் ஒரு கோடி ஜனத்தொகைக்கும் குறைவாக உள்ள நாடுகள் தனியாக இல்லையா? அவைகள் நாசமாகவா போய்விட்டன? சின்ன நாடுகளான பர்மா, இலங்கை போன்ற நாடுகள் நாசமாகவா போய்விட்டன? 45 கோடி மக்களும் ஒன்றாக இருப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? பல ஜாதி. வெவ்வேறு கலாசாரம், பழக்க வழக்கம் இருக்கிறதே!

பாராளு மன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் கிடையாது. 500 பேர்களில் 39 பேர் தான் தமிழர். இந்த 39 பேரும் எழுந்து நின்றால் இந்தியில் பேசு என்கிறார்கள். இந்தியில் பேசினால் என்ன புரியும்? "நாங்கள் பிரிவினை கேட்பதை விட்டுவிட்டோம்" என்று சொன்னால் ஒருகால் காமராசர் சந்தோஷப்படுவார். இவர்களைச் ஜெயித்துவிட்டேன் என்று நேருவிடம் சொல்லுவார். ஆனால் மனதுக்குள் நினைப்பார் - என்னடா இவரு இப்படி ஆகிவிட்டாரே என்று. நாங்கள் இல்லாமல் இருந்தால் காமராஜருக்கோ பக்தவத்சலத்திற்கோ பதவி வருமா?

வேறு பல துறைகளில் அரசாங்கத்துடன் போராட வேண்டியுள்ளது. ஆனால் இந்தச் சமயத்தில் சீனாக்காரன் சண்டைக்கு வந்திருக்கிறான். இந்த நேரத்தில் சும்மா வம்புக்கு இழுக்கக்கூடாது என்று ஒளிந்திருக்கிறோம். எங்களை நீங்கள் வம்புக்கு இழுக்குறீர்கள். இந்தச் சமயத்தில் ஏன் இந்தப் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும்?

டெல்லி மேல் நம்பிக்கை இல்லை. டெல்லியில் இருப்பவர்களுக்கு நம்மைப் பற்றிச் சரியாகத்தெரியாது. ஆதலால் எங்கள் ஏரைத் தனியாக ஓட்டிக்கொள்ளுகிறோம் என்கிறோம். பிரிந்த பிறகு உங்களை எதிர்க்கவில்லை. உங்கள்மீது யாராவது படை எடுத்தாலோ ஒன்றாக இருந்து எதிர்ப்போம். அப்படி ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுவோம்.

பிரிவினை கூடாது என்றால் எங்கள் கதி என்ன? நாளைக்கே பிரிவினைத் தடைச்சட்டம் வந்தால் நாளை மறுநாள் நாங்கள் ஜெயிலுக்குத்தான் போக வேண்டியதிருக்கும். இப்போதுள்ள நிலைமையில் கூட ஏன்னால் டெல்லியில் மந்திரியாக ஆக முடியும். கேட்டால் உடனே கொடுத்துவிடுவார்கள். இந்தச் சனியன் ஒன்று தான் கத்துகிறது இழுத்துப்போடு மந்திரியாக என்று போட்டுவிடுவார்கள்.

பிரிவினைத் தடைச் சட்டம் விஷயத்தில் அரசாங்கம் மீண்டும் யோசனை செய்ய வேண்டும். சட்டத்தைக் கொண்டு வருவதில் அவர்களுக்கு அவசரம் இருந்தால் இரண்டு பேருக்கும் அவசரமாகத்தான் இருக்கும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமறைவாக இருந்த தீரத்தலைவர்கள் ராம்ரெட்டி என்ற பதினாறுவயது நிரம்பாத பள்ளி மாணவனைத் தூண்டிவிட்டு கொலை செய்வதற்குக் கட்டாயப்படுத்தினர். தூக்குமேடைக்குப் பயப்படாதவர்கள் என்று பத்திரிகையிலே எழுதிக்காட்டினார்களே தவிர, மூட்டை தூக்கப் பயன்படும் முதுகைத்தான் எதிரிக்குக் காட்டி எங்கோ ஓடினார்கள்.

திருமல் ரெட்டியென்ற ஒரு கம்யூனிஸ்ட் தன்னுடைய ரத்த வெறியைத் தணித்துக்கொள்வதற்காக இரவெல்லாம் ஒளிந்துகொண்டே போய் நல்லா கொண்டா மாவட்டம் ஜங்கம் வட்டத்தில் உள்ள போலீஸ் நிலையத்தைப் பார்த்து வெடிகுண்டு வீசியபோது பிடிபட்டான். துணைச் சிறைக்கு அழைத்துப் போகும்போது தப்பியோட முயன்றான். "ரணதிவே ஜிந்தாபாத்! கம்யூனிஸ்ட் கட்சி ஜிந்தாபாத்! ஆந்திரமகா சபை ஜிந்தாபாத்" என்று கூச்சலிட்டு ஓடும்போது சுட்டுக் கொல்லப்பட்டான்.

பல கொலைகளைத் தவிர்ப்பதற்காகவே ஒரு கொலை நடந்தது. பயங்கரமாகச் சிறைக்குள்ளே கட்டி வைத்துச் சுட்டுக் கொன்றுவிட்டதாகக் கட்சியின் சுற்றறிக்கைகள் இந்தியாவெங்கும் பரப்பப்பட்டன. இதனையே காரணமாகக் காட்டிச் சிறைக்குள்ளேயிருந்த கழுத்தறுப்புக்காரர்கள் கிளர்ச்சிகள் துவக்கினர். எல்லாக்கைதிகளும் கம்யூனிஸ்ட் கட்சியின் கோஷங்களை முழக்கினராம். தடுத்துவிட்ட சிறை அதிகாரிகளைத் தாக்கினராம். எந்த நேரத்திலும் தப்பியோடுவதற்கு சிறைக் கம்யூனிஸ்டுகள் தயாராக இருக்கவேண்டுமென்று கட்சியின் ரகசிய அறிக்கைகள் தரப்பட்டுள்ளன.

நெல்லைச் சதிவழக்கு விசாரணையில் கைதிகள் பின்பற்ற வேண்டிய முறைகளையும், சிறையிலுள்ள காவல் கைதிகளை முடிந்தளவு விடுவிக்க வேண்டுமென்றும் வேலைகள் துவக்கப்பட்டன.

முன்னேற்றக் கழகத்தவர் சிறையிலேயிருக்கப் பயந்துவிட்டவர்கள் என்று நாக்கை நீட்டும் நாச வேலைக்காரர்கள் 'அலவன்ஸ்' வாங்கிக்கொண்டுதான் இருந்தார்கள். ஏகாதிபத்திய சர்க்கார் தருகின்ற கூலியைப்பெறுவதற்கும்தயாரானார்கள். குடும்ப அலவன்ஸ் கைது செய்யப்பட்டவர்களின் வருமானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. நிகழ்கால முறைகள் சில சந்தர்ப்பங்களில் தளர்த்தப்பட்டது. மாதம் ரூ. 500 வரை அதிக பட்ச அலவன்ஸ் நிர்ணயிக்கப்பட்டது.

கஷ்டங்களைக் குறைப்பதற்காக ஒரு காவல் கைதி சிறைப்பட்டவுடனேயே அவருடைய குடும்பத்துக்கு மாதம் ஐம்பது ரூபாய்க்கு அதிகமாகப் போகாமல் இடைக்கால நிவாரணம் நிர்ணயித்துத் தரப்பட்டது.

ஒரு காவல் கைதி சிறைக்கு வந்தவுடன் அவருடைய தேவைப் பொருட்களை வாங்குவதற்காக ரூ. 210 அலவன்ஸ் அளிக்கப்படும். தவிர ரூ. 40 அவருடை இதர தேவைகளுக்காகத் தரப்படும். படுக்கை, கட்டில், தேவையான மரச் சாமான், சமையல் பாத்திரங்கள் சர்க்காரால் அளிக்கப்படும். உணவுப் பொருட்களின் விலை உயர்ந்தால் அலவன்ஸ் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டது. இந்தச் சலுகைகள் இருந்தும் கூட சிறைக்குள்ளே தினமும் ஒரு கலகம் நடைபெற்றது. தினமும் வசதிகளைக் கேட்டுப்புதுப்புதுக் கோரிக்கைகளை வைப்பதில் கம்யூனிஸ்ட்த் தலைவர்கள்சளைக்கவில்லை!

ஆந்திரக் கம்யூனிஸ்ட் தலைவர் சந்திரம், தமிழ்நாட்டுச் செயலாளர் எம். ஆர். வெங்சட்டராமன், ஏ. கே. கோபாலன் ஆகியோர் சிறைகளுக்குள்ளே-அதுவும் சிறப்பாக கடலூர் மத்திய சிறையில் கலகத்தைத் தூண்டிவிட்டு, வேடிக்கைத் தலைவர்களாக நின்றனர். பட்டினி நாடகம் அவர்களுக்கு மிகவும் பழக்கமான ஒன்றாகும்.

சிறைகளைச் சொல்லிவிட்டால் உள்ளே வந்து புகுந்து கொள்வோம் (கூண்டுக்கு வரும் புறாக்களைப் போல்) என்று கலை மன்றச் செயலாளர் எனப்படும் உசிலம்பட்டிப் பையன் அடிக்கடி சொல்கிறார். ஆனால் அவருடைய கட்சியின் பழைய செய்திகள் -விரட்டிப் பிடித்த போது கூட வேகமாக ஓடியதைத் தான் நமக்குச் சொல்கின்றன.

கோவை மில் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்த மாதவன் என்பவரும் பொள்ளாச் பழனிச்சாமியும் பதுங்கியிருந்த இடத்திலேயிருந்து வெளியே கொண்டு வரப்பட்டபோது போலீசாரின் கைகளைக் கடித்து விட்டார்களாம்! எதற்காக? கம்யூனிச லட்சியத்தைக் காக்க அல்ல, ரத்த வெறியைத் தணித்துக்கொள்ள! இது அழகு சுந்தரிகளுக்குப் புரியுமா? அல்லது பாப்பாப்பாட்டிகளுக்குத் தெரியுமா?


சொந்தக் கட்சியின் பிணநாற்றத்தை மூடிவைத்துவிட்டு, அண்ணாவுக்குச் சனநாயகம் போதிக்கப் புறப்பட்டிருக்கும் 'புதிய நட்சத்திரங்கள்', தங்கள் கட்சியைப் பற்றியே தெரிந்துகொள்ளாத 'அரை வேக்காடுகள்' தாங்கள்தான் என்ற உண்மையை இனியாவது உணருவார்களா? தொண்டர்கள் உணர்த்துவிப்பார்களா?

இந்திய-சீன எல்லைப்போரில் சீனத்தவர்க்குவாழ்த்துக்கூறும் கம்யூனிஸ்டுகளையும் காட்டிக்

(10-ம் பக்கம் பார்க்க)

திருக்கோஷ்டியூர் தொகுதி

## எங்கள் எம். எல். ஏ. செ. மாதவன்



வழக்கறிஞர் திரு. செ. மாதவன் அவர்கள் இராமனாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள சிங்கம்புணரியில் 1933-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் மூன்றும் நாள் பிறந்து கல்வியறிவை ஏற்கக்கூடிய பக்குவமான வயதை அடைந்ததும் திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் மத்திய படிப்பை முடித்துக் கொண்டுகாரைக்குடிஅழகப்பா கல்லூரியிலும், மதுரை தியாகராயர் கல்லூரியிலும் உயர் படிப்பைமுடித்து பிறகுசென்னை சட்டக்கல்லூரியில் படித்து அதிலும் வெற்றி பெற்று சட்டப் படிப்பை சரிவர முடித்து வழக்கறிஞர் என்ற பட்டத்தையும் ஏற்றூர்.

திரு. மாதவன் அவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது, மலாயா, சிங்கப்பூர், பினங்கு, இலங்கை முதலிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் போய் அங்குள்ள தமிழர்களின் பிற்போக்கு நிலைமையையும், அவல நிலையையும் கண்டு அது முதல் தமிழ் உணர்ச்சியும் தமிழர்களிடத்திலேபற்றுதலும் ஏற்பட்டுத் தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் குறிப்பாக திராவிடர்களுக்காகப் பாடுபடக்கூடிய தாய்க் கழகமாம் தி. மு. கழகத்தில் உறுப்பினராகி அன்றுமுதல் இன்று வரை நாட்டிற்காகவும்-நாட்டு மக்களுக்காகவும் அண்டை நாடுகளில் அவல நிலையுடன் வாழும் தமிழர்களுக்காகவும் தொண்டரிலும் தொண்டராய் தொண்டாற்றி பொதுமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று வருகிருர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

இவர் சிறு வயதிலிருந்தே விளையாட்டு அரங்கங்களில் விளையாடுவதிலும் விளையாட்டுகளை துவக்கி வைப்பதிலும் இலக்கியங்கள், நாவல்கள் படிப்பதிலும் மிகவும் விருப்பமுடையவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினருமானவர். பொது நலத் தொண்டில் மிகவும் அக்கரை உள்ளவர். இல்லை என்பவரிடத்தில் இரக்கம் காட்டும் ஒரு இளம் வழக்கறிஞர். திராவிட முன்னேற்றக்கழகப் பேச்சாளர்களிலே திரு. மாதவனும்ஒருவர். அவருடைய பேச்சுத்திறனும் நாவன்மையும் பொது மக்களின் உள்ளங்களைக்கவரக்கூடியதாய் கொடுத்த பொருளைகுறிப்பிட்ட நேரத்திற்குள் தெளிவாகவும் விரிவாகவும் பேசி முடிக்கும் திறமை பெற்றவர்.

ஏறக்குறைய இருபத்தெட்டு வயதையுடைய திரு. மாதவன் அவர்கள் தம் இளம் வயதிலேயே அதாவது 1962-ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் திருக்கோஷ்டியூர் தொகுதியின் காங்கிரசின் வாரிசு என்று சொல்லிக் கொண்டிருக்கும் இராமனாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அப்பகுதிகளிலே மிகவும் செல்வாக்கு உள்ளவருமான ஏரியூர் சொக்கலிங்க அம்பலக்காரருடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்டு 3549 வாக்குகள் அதிகமாகப் பெற்று காங்கிரசின் கோட்டையை தகர்த்து தூள்தூளாக்கிசட்டமன்றத்தில் நமது கழக உறுப்பினராகப் பிரவேசித்திருக்கிருர்.

வழக்கறிஞர் திரு. செ. மாதவன் அவர்களைப்பற்றி சென்ற தேர்தலுக்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு நன்ருகத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். காரணம் அவர் சட்டமன்றத்துக்குச் சென்ற இந்த ஓராண்டு காலத்திற்குள் அநேக முறை சட்டமன்றத்தில் பல குறிப்பிடத்தக்க திட்டங்களைப் பற்றியும் அவர் தொகுதியான திருக்கோஷ்டியூர் வட்டாரத்தின் பிற்போக்கு நிலைமையைப் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறி சட்டமன்றத்தில் வாதாடி இருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலுமிவர் இனம் ஒழிப்புக் கமிட்டியிலே ஒருஉறுப்பினராக அங்கம் வகித்து வருகிருர். தன் தொகுதிக்கு அடிக்கடி சென்று அங்குள்ள ஒவ்வொரு சிறு கிராமத்திற்கும் போய் கிராமங்களை சுற்றிப் பார்த்து, கிராம மக்களின் குறைகளை அறிந்து அந்தக் குறைபாடுகளை சட்டமன்றத்திலே எழுப்பி அவைகளைத் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் தவறுவதில்லை.

அவரது தொகுதியில் நீண்ட காலமாக நிறைவேருது இருந்த உப்பாறு அணைக்கட்டுத்திட்டம் மாவலி ஆறு அணைக்கட்டு திட்டம் போன்ற பல முக்கியமான திட்டங்களைச் சட்டமன்றத்திலே எழுப்பி உடனடியாக அத்திட்டங்களுக்குத் தீர்வு கண்டு அமுலுக்குக் கொண்டு வர பெரும் முயற்சி எடுத்திருக்கிருர். மேலும் வழக்கு மன்றங்களிலே கழகத்தோழர்களின் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்படும் வழக்குகளுக்காக மிகவும் அக்கரையோடு வாதாடிவெற்றி பெறுவதையே கடமையாகக் கொண்டவர். கழகத்திற்காகவும் கழக முன்னேற்றத்திற்காகவும் மிகவும்பொறுப்போடுபாடுபட்டு வருகிருர்.

ஆகையால் பொதுமக்களாகிய நாம் வரவிருக்கும் சட்டமன்ற மாநகராட்சி மன்ற ஊராட்சி மன்ற தேர்தல்களிலும் திரு மாதவன் போன்ற இளைஞர்களை தேர்ந்தெடுத்து மன்றங்களுக்கு அனுப்பினல் சுறுசுறுப்புடனும் முயற்சியுடனும் தன் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து மக்களின் குறைகளை அறிந்து அவைகளை அரசினரின் கவனத்துக்குக் கொண்டு வந்து தன் தொகுதியை செழிப்படையச் செய்வார்கள் என்பது உறுதி.

—கீழ்ப்பூங்குடி உ. சாமிநாதன்.

## த. தே. க. தலைவருக்கு குன்றக்குடி அடிகளார் சாட்டை!

வெட்டு ஒன்று; துண்டு இரண்டாகப் பேசும் வீராதி வீரரும் ஈரோட்டு இளைய சன்னிதானமுமான தோழர் செல்லாக்காசு மதுரைத் திடலில் தர்மசங்கடமான நிலை ஒன்றில் சிக்கிக்கொண்டு விழிக்க நேரிட்டது.

இந்நகர் தமிழர் எழுச்சி மன்றம் எனும் குட்டிக் காங்கிரசமைப்பினர் கூட்டிய கூட்டத்தில் குன்றக்குடி அடிகளாரும் தோழர் செல்லாக்காசும் கலந்துகொண்டனர்.

ஏகஇந்தியாவுக்கு வக்காலத்து வாங்கும் கூட்ட மேடையில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்றெழுதப் பட்ட படுதாஒன்று கட்டப்பட்டிருந்தது.

குன்றக்குடி அடிகளாருக்கு அதைப் பார்த்ததும் என்ன உணர்வு ஏற்பட்டதோ, தெரியவில்லை. தான் பேசுகையில் இப்படிக் கேட்டார்: "இங்கே தமிழ்நாடு தமிழருக்கே என்று எழுதிக் கட்டியிருக்கிறீர்கள்.

**இந்திய ஒருமைப்பாட்டைப் பேண நினைக்கின்ற இவ்வேளையில் இப்படி எழுதி வைத்திருப்பதன் பொருளென்ன ?**

**தமிழ்நாடு தமிழருக்கே என்ருல் பின் அவரவர்கள் கிளம்பி, ஆந்திர நாடு ஆந்திரருக்கே என்றும் கன்னட நாடு கன்னடியருக்கே என்றும் மலையாளிகளுக்கே கேரளநாடு என்றும் கிளம்புவதா? ஒவ்வொருவரும் இப்படிக் கிளம்பினுல் ஏகஇந்திய ஒற்றுமை என்ன ஆவது? த. தே. க. சொல்லி வரும் இலட்சியம் இது தானு?" இங்கே பேச இருக்கும் அதன் தலைவர் அதற்குத் தக்க பதிலளிப்பார் என்றே கருதுகிறேன்."**

**குன்றக்குடி அடிகளாருக்குப்பின் தோழர் செல்லாக்காசு (சம்பத்) ஏறத்தாழ ஒண்ணேகால் மணி நேரம் உலகப் பிரச்சினைகளையெல்லாம் அள்ளி வீசிவிட்டு இறுதியாக அண்ணு அவர்களையும் அறைகூவிக் கேட்டார்: "நேரடியாகப் பதில் சொல்லுங்கள்! நீங்கள் திராவிடநாடு கேட்கப்போகிறீர்களா? இல்லையா? உண்டா? இல்லையா? உடனே பதில் சொல்லுங்கள்!"**

நாடகமேடை ராஜாபோல் ஆர்ப்பாட்ட வசனம் பேசிய தோழர் செல்லாக்காசு அண்ணுவைக் கேள்வி கேட்டதோடு பேச்சை முடித்துவிட்டார். ஆனல் கண்ணெதிரே நின்று "வெட்டொன்று; துண்டிரண்டாகப் பதில் சொல்லுங்கள் வீராதி வீரரே" என்று கேட்ட குன்றக்குடி அடிகளாருக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை.

வெட்டிக்கொள்ளும் உரிமையோடு ஒட்டிக்கொள்ளப்போகும் அவரின் வீருப்பு இவ்வளவுதானு என்று பேசிக்கொண்டு பொதுமக்கள் கலைந்தார்கள்.

"தலைவரை மட்டும் அழைத்தால் கூட்டம் சேராதே என்று அவரையும் அழைத்தோம். இப்போது கூட்டம் மட்டும் சேரவில்லை; நம் முகத்தில் வாட்டமும் சேர்ந்திருக்கிறதே!" என்று வருந்தினராம் கூட்டத்தைக் கூட்டினேர்.

(5–ம் பக்கத் தொடர்ச்சி)

முகமாக நிறுவிக் கொண்ட பேராயக் கட்சியின் விடுதலை உணர்விற்குப் பின்னர் தோன்றியதா? பருக்கைச் சோற்றுக்குக் கையேந்தி, படுக்கும் பாய்க்கு உடல் சொரிந்து, பிறன் வீசி எறியும் ஒரு சில காசுகளைக் குனிந்து பொறுக்கிக் கும்பி நிறைக்கும் தன்மானமிழந்த தம்பிரான்மார்கள் ஒரு சிலரன்றி, உண்மைத் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவனுடைய உள்ளுணர்விலும் எழுந்ததாகும் இத் தமிழக விடுதலை வேட்கை! இதை எவராலும் அழித்துவிடல் முடியாது. தமிழ் மொழி உள்ளளவும் தமிழன் இருப்பான். தமிழன் இருக்கும் வரை, தமிழ் நாட்டுணர்வும் இருந்தே தீரும் என்பதை எவரும் மறந்துவிடல் வேண்டாம்.

மொழி, இலக்கிய, பண்பாட்டு, சமய அடிப்படையில், தனக்கு ஊரகம் நடைபெறுங் காலத்து, ஒவ்வொரு தமிழனும் எழுந்து தன் விடுதலையுணர்வை வெளிப்படுத்தியே தீர்வான்; வெறும் சட்ட திட்டங்களாலும், அடக்கு முறைகளாலும் இதனை அடக்கி விடல் முடியாது. போலி ஒற்றுமை மணிலாக் கொட்டையின் புறத்தோலைப் போன்றது. வேட்கையுள்ளத்தால் அக்காய் உடைத்தெறியப் படும்பொழுது மணிகள் விடுதலை பெற்றே தீரும்.

முற்றி முதிர்ந்து வளர்ந்து பரந்து சிறத்த ஓரினத்தின் ஆணி வேரை ஒருவராலும் அவ்வளவு எளிதில் அறுத்தெரிந்து விடல் முடியாது. தமிழ் மொழி விடுதலை தமிழ் இலக்கியப் பண்பாட்டு விடுதலை, தமிழர் சமுதாய விடுதலை என்பவற்றிற்குத் தீங்கு நெருங்கால் நாட்டு விடுதலை முழக்கம் எம்மருங்கும் வலித்தே தீரும். அக்கால் விடுதலை முழக்கமிடும் இத்தென்னகக் கட்சியோடு ஒவ்வொரு தமிழனும் ஒன்றித் தன்னை முழுமைப்படுத்திக் கொள்ள நேரினும் நேரும் என்று அரசியலார்க்கு எச்சரித்துக் கூறுகின்றோம். சாவைவிட அடக்கியொடுக்கப்படுந் தன்மை இனிப்பதன்று. இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வைவிடப் பன்னூருயிர மடங்கு உயர்ந்து வலிந்ததாகும் தமிழக விடுதலையுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சீறும் புயலை மீன் வலை கொண்டு மறிக்கும் மடமைச் செயல் போன்றது. குடியரசுக் கொள்கைக்கே மாறான இச்சட்டம் நன்மை பயப்பதன்று. மேலும் மேலும் விடுதலை உள்ளத்தைக் கிண்டிக் கிளறுவதாகும். **'துஞ்சு புலி இடறிய சிதடன்'** போல ஆளுநர் ஆகிவிடக் கூடாது என்பதே நாம் விரும்புவதாகும்.

"Carry on : But Remember...!"

C. N. A.

ON FREEDOM OF SPEECH AT THE RAJYA SABHA

[அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் 25-1-63 அன்று பிரிவினைத் தடைச் சட்ட மசோதா பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு ஆற்றிய ஆங்கிலப் பேருரையும் அதன் தமிழாக்கமும்]

விலை 75 காசுகள்

விவரங்கட்கு :

சுகுமாரன் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்

(8–ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பார்கள் என்று கண்காணிக்கப் பட்டவர்களையும் கைது செய்தார்கள். டாங்கேத் தலைவர்களும், மாஸ்கோ ஏடுகளும், பீகிங் வானொலியும் இந்திய சர்க்காரைக் கண்டித்து அறிக்கைவிட்டனர். ஆயுட் கைதிகள் கூட தங்களின் மேதைத் தன்மையைக் காட்டி எழுதிக்கொண்டனர்.

எந்த ஒரு சர்க்காரைக் காப்பாற்றுவதற்காகத் தங்களை முற்போக்காளர் பட்டியலிலே சேர்த்துக்கொண்டிருக்கிறார்களோ அதே தலைவர்கள்தான் நேருவையும் பட்டேலையும் ஏகாதிபத்திய வெறியர்களின் எடுபிடிகள் என்று முழக்கமிட்டார்கள்!

இந்திய சர்க்காரின் அடக்குமுறைக்கு உலகம் முழுவதும் கண்டனம் தெரிவிக்கப்படுவதாக வேறு எந்த இதழ்களிலும் வெளிவராத செய்திகளைத் தங்கள் பத்திரிகைகளிலே மட்டும் வெளியிட்டனர். இப்படி ஒவ்வொரு செய்தியாக மதிப்பிட்டால் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் கொக்கிப் புத்திக் கோணல் வேலைக்காரர்கள் அழுகிய பிணங்களைப் போல் இலட்சியத்தை இரத்த வெள்ளத்திலே போட்டு மிதித்துவிட்ட வெறியர்களாகவேதான் தென்படுவர்.

இவைகளையெல்லாம்- இந்தக் குறிப்புச் செய்திகளையெல்லாம் கம்யூனிஸ்டு பத்திரிகைகளிலேயிருந்துதான் தொகுத்துத் தந்துள்ளோம். எந்தப் பத்திரிகையென்று எடுபிடிகள் தேடிப் பார்க்கட்டும்-மானமுள்ள தலைவர்கள் மறுக்க முன்வரட்டும்-மற்ற செய்திகள் மறு இதழில்!

—கூடலரசன்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏண்டா எங்க வீட்டில் வாணவேடிக்கை நடக்கிற அன்னிக்கி நீ புஸ்வாணம் விடப்போறியா போடா போ உன் கல்யாணத் தேதியை மாத்தி வச்சிக்க."

"இல்லே எஜமான் அன்னிக்கே வச்சுக்கனுமின்னு அவசரப்படுறாங்க. மாத்திக்கமுடியாது மன்னிச்சுக்குங்க எஜமான் ......'

வேலைக்காரர்களின் வேண்டுகோளுக்கு சுலபத்தில் தலையசைத்துப் பழக்கமில்லாதவர் வீரப்பர். வேலைக்காரர்களை அலட்சியப்படுத்தாவிட்டால் அவர்கள் தலைக்குமேல் ஏறிவிடுவார்கள். தன்னை மதிக்கமாட்டார்கள் என்பது அவர் சித்தாந்தம். முதலாளித்துவத்திற்கு அவர் வகுத்து வைத்திருந்த இலக்கணங்கள் மருதமுத்துவிடம் பலிக்கவில்லை. அவன் குழைவிலேயே காரியங்களைச் சாதித்துப் பழக்கப்பட்டிருந்தவன்.

"திங்கட்கிழமைதானே சரி சரி போய் வேலையைப் பார். பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று அவனை அனுப்பிவிட்டு பந்தலை நோக்கி நடந்தார்.

நடந்தவர் திரும்பி "டேய் மருதா இங்கே வாடா" என்று கூப்பிட்டார்.

கைசுண்டிக் கூப்பிட்டவுடன் ஓடிவரும் நன்றியுள்ள நாய்க்குட்டியைப் போல் மருதமுத்து ஓடிவந்து அடக்கமாக நின்றான்.

முகூர்த்தப்பந்தலுக்கு அருகில் செழித்து வளர்ந்திருந்த இரண்டு மரத்தில் பத்துப் பதினைந்து காக்கை கூடுகள் இருந்தன. வீரப்பர் அந்த மரத்தின் நிழலில் நின்று கொண்டு பந்தல் வேலைகளைக் கவனிக்கும்போது காக்கைக் கூட்டிலிருந்து கழிவுப்பொருள் விழுந்து பலமுறை ஊளைச்சதை நிறைந்த மேனியை அசிங்கப்படுத்தியிருக்கின்றன. கல்யாணத்தன்று பெருங்கூட்டத்தில் யார் மீதாவது இப்படி நடந்து விடக்கூடாதே என்பதற்காக முன்னெச்சரிக்கையுடன் அந்தக் கூடுகளையெல்லாம் கலைத்தெரியும்படி மருதமுத்துவுக்குக் கட்டளையிட்டார்.

மரமேறி பழக்கமில்லாத மருதமுத்து காரியம் முடியும் வரை வீரப்பரின் மனம் கோணாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதற்காக வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு தட்டுத் தடுமாறி ஏறி மரத்தின் உச்சிக்கு வந்து சேர்ந்தான்.

"டேய் மருதா பாத்து, மெல்ல அவசரப்படாதே" என்று வீரப்பர் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

வாயில்லாஜீவன்களின் வாழ்க்கைக் கூடாரத்தை முதலாளியின் குரலுக்குப் பயந்து கலைத்தெறிந்து கொண்டிருந்த மருதமுத்து வலுவில்லாத ஒரு கிளையில் கால்வைத்து அடுத்த கிளைக்குத் தாவ முயற்சித்தான் ......மறுவினாடி எத்தனை கோரமான நிகழ்ச்சி. வீரப்பர் அலறித் துடித்து அதிர்ச்சியடைந்து விட்டார். கிளை ஒடிந்து அவலக் கூச்சலுடன் மருதமுத்து கீழே விழுந்தான்.

கழுத்தறுத்துப் போடப்பட்ட கோழியைப் போல் மருதமுத்துவின் கால் கைகள் துடித்தன. விழிபிதுங்கி வெளியில் வந்துகொண்டிருந்தது. அவன் உதடுகள் யாருக்கோ, எதையோ சொல்லிவிட்டுப்போகத் துடியாய் துடித்தன. அது நடக்கவில்லை. அவன் வலது கரத்தைத் தூக்கி ஓங்கித் தரையிலடித்துப் புழுதியைக் கிளப்பினான். இதயத்தில் தேங்கிக் கிடந்த ஆசைக்கனவுகளின் கடைசி மிருகபலமோ அது!

வீரப்பருக்கு வியர்த்துக் கொட்டியது. ஊளைச்சதை கிடுகிடுத்தது. இப்படி ஒரு பயங்கர நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டது கூட இல்லை அவர். "மருதாஐயா மருதா" கோழைத்தனம் நிறைந்த இதயம் இளகிய வார்த்தைகளை நடுக்கத்தோடு வெளியிட்டது.

பதட்டத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தார். பணக்காரர்களின் கொடுமைக்குச் சூழ்நிலைகூட எவ்வளவு சாதகமாக இருக்கிறது. பந்தல் வேலை செய்து கொண்டிருந்த அத்தனை பணியாட்களும் அப்பொழுதுதான் மதிய உணவுக்குச் சென்றிருந்தார்கள். குற்றங்களைக் குழி தோண்டி மறைத்தே பழக்கப்பட்டுப்போன வீரப்பரின் கோழை இதயம் "இங்கே நிற்காதே ஓடு, ஓடு" என்று அவரை வேகமாகத் துரத்தியது. கீழே விழுந்து கிடந்த கொத்துச் சாவியை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு குட்டி யானையைப் போல பங்களாவை நோக்கி ஓடினார்.

எதிலும் சம்பந்தமில்லாதவரைப் போல் நடத்தவேண்டியதையெல்லாம் சத்தமில்லாமல் நடத்தி மருதமுத்துவின் பிணத்தைச் சுடுகாட்டில் சாம்பலாக்கியவுடன்தான் அவர் உடல் நடுக்கம் நின்றது.

மறுநாள் பந்தல் வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களிடம் இப்படிப் பேசினார் வீரப்பர்.

"மருதமுத்து நாணயமானவன். எப்படி விழுந்தானென்றே தெரியவில்லை. நான் பார்த்திருந்தால் காரில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று பணத்தைப் பார்க்காமல் உயிரைக் காப்பாற்றியிருப்பேன். அன்றைக்கு மதியம்தான் என்னிடம் வந்து

(3-ம் பக்கம் பார்க்க)

**எங்கள் கேள்வியும் உங்கள் பதிலும்**

தடைச்சட்டம் வந்தால் என்ன செய்வீர்கள் ?

# அண்ணன் இடும் கட்டளையை நிறைவேற்றுவோம் !

# அறவழி நின்று உரிமைக்குப் போராடுவோம் !

கேள்வி: **விடுதலைக் குரலை அடக்கி ஒடுக்கத் தடைச் சட்டம் வந்தால் என்ன செய்வீர்கள் ?**

ப: விடுதலைக்குரலைஅடக்கி ஒடுக்க தடைச் சட்டம் வந்தால் கத்தி எடுத்து களம் செல்லமாட்டோம். துப்பாக்கி எடுத்து அணி வகுக்கமாட்டோம். அமைதியாக அண்ணா அவர்கள் இடும் கட்டளையை சிரம் தாங்கி நடப்போம்.

அகிம்சை காண்பித்த காந்தியைப்போல், செக்கிழுத்தசிதம்பரனார் போல் அஞ்சாத சிங்கம் நேருவைப் போல், கொடிகாத்த குமரன் போல், கடமையோடும் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டுடனும் சென்று தடைச் சட்டத்தை மனநிறைவோடு எதிர்கொண்டு வரவேற்போம்.

எஸ். கே. ராமசாமி
சத்தியமங்கலம்

ப: அறிஞர் அண்ணா அவர்கள் இடும் ஆணையை இதயத்தில் தாங்கி அவர் காட்டும் சீரிய வழியில் சென்று நம்முடைய இலட்சியத்தை நிறைவேற்றுவோம்.
குறிப்பாக......

தடைச்சட்டம், நம்முடைய இலட்சிய நாதத்தை ஒடுக்க வரும் கட்டத்தில், பொறுமையையும், சகிப்புத்தன்மையையும், மேற்கொண்டு, ஆற்றல் மிக்க நம் அறத்தலைவன் இடும் கட்டளைப்படி நடப்போம்.
அறப்போராட்டமா?

உயிர்கொடுத்து நம்முடைய கொள்கையைக் காப்போம்.

பேசுவதற்குத் தடையா?

சட்டம் சம்மட்டி, விலங்கு ரூபத்தில் தாக்கினால்...மகிழ்வோடு...கரங்களை நீட்டுவோம்

மேடையில் நின்று கருத்துக்களைப் பற்றிப் பேசினால்......... காராக்கிரகத்தில் தள்ளுவார்களா?

புன்சிரிப்போடு, சிறைச்சாலை செல்லுவோம்.

எழுதும் நூல்களுக்கும், அரங்கத்தில் நடிக்கும் நாடகங்களுக்கும் தடையென்றாலும் அதை அமைதியான முறையில் மீறி, கண்ணியத்தோடு நம்முடைய இலட்சியத்தைப் பரப்புவோம்

ஆட்சியாளரின் தடைச்சட்டம் கருநாகம் போன்று சீறி நம்மைக் கொத்த வந்தாலும் நம்முடைய இதயங்களில் நர்த்தனமாடிக்கொண்டுவரும் மலரைக் கசக்க முடியாது. நம்முடைய எண்ணத்தில் பூத்து மணம் கமழும், கருத்துமலர். நாம் அழிந்தாலும், வருங்கால ஏட்டில் பூக்கும் புதுமலராக காட்சி தரும். நம் சந்ததியினர் விரும்பும் எண்ண மலராக ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆகவே—

இந்த நாட்டை, சமதர்ம பூங்காவாக மாற்றவும் தாயகத்தின் விடுதலைக்காகவும், தன்மானம் காக்கவும், தாய்மொழி மீட்கவும், தலையைக் கொடுத்தாவது தடையை உடைத்து விடுதலையைப் பெறுவோம் இது உறுதி! உறுதி!! உறுதி!!!

மு. மு. ஜெகபர்
(அன்புமகிழ்நன்)
சென்னை-23

ப: விடுதலைக் குரலை அடக்கி ஒடுக்கத் தடைச் சட்டம் வந்தால்...? என் உணர்ச்சி பொங்கி எழும். உடனே களத்தில் குதிப்பேன். தடையை மீறுவேன். எதிர்ப்பவர்களை வீழ்த்துவேன். சிறையில் தள்ளினால் சிறைகளைத் தூளாக்குவேன். அதிகாரத் திமிர் பிடித்த துரைத்தனத்தை இருந்த இடம் தெரியாமல் செய்துவிடுவேன். தடை சட்டத்தைப் பொடிப் பொடியாக்குவேன்...என்றெல்லாம் நான் கூறமாட்டேன். இப்படியெல்லாம் நான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளை மீறி நடக்கமாட்டேன். அப்படி நடப்பவன் அண்ணாவின் தம்பியுமல்ல. கழகத்தின் தூயதொண்டனுமல்ல.

உணர்வு பொங்கியெழும். ஆனால் பொங்கியெழுகின்ற உணர்ச்சியை அடக்கிக்கொள்வேன். ஆம்...என் உணர்ச்சியினும் அதைவிட என் உயிரினும் மேலான ஒரு உருவத்தை மதிக்கிறேன். அதுதான் தென்னாட்டை வாழ்விக்க வந்த தெய்வம். நம் அடிமை வாழ்வை அகற்ற வந்த அன்பின் சிகரம் அருமை அண்ணா!

சிறைவாசம் கிடைத்தால், சிங்காரச் சோலை என எண்ணி சிந்தை களிப்பேன். தடியடி படும்போது விடுதலை வீரர்களுக்குத் தரும் முதற் பரிசு என்று எண்ணி, தழும்புகளைத் தடவி இன்பம் பெறுவேன். துப்பாக்கியிலுள்ள ரவைகள் என் உடலை ஊடுறுவும் போது ஏ ரவைகளே! என் உடலைத்தான் துளை செய்ய முடியுமே தவிர, என் மூச்சோடு கலந்து விட்ட விடுதலை உணர்ச்சியை துளை செய்ய உனக்குச் சக்தி ஏது என்று, அவைகளைக்கண்டு பரிதாபப்படுவேன்.

வேறு வழியின்றி, அதிகார ஆணவம் பிடித்த இத்துரைத்தனம் விடுதலை விரும்பிகளுக்கு வரலாறு தரும் கடைசிப் பரிசான தூக்கு மேடையில் நிறுத்தினால்...?

ஏ தூக்குமேடையே! இன்னும் உன் இரத்தப்பசி அடங்கவில்லையா? தென்னாட்டு வரலாற்றில் எத்தனையோ விடுதலை விரும்பிகளின் இரத்தத்தை ருசித்திருப்பாய், உன் பசி என்னோடு ஒழியட்டும், ஆனால்... உன் வேலையை மட்டும் நிறுத்திக் கொள்ளாதே. இன்றுவரை விடுதலை விரும்பிகளின் இரத்தச் சுவையை மட்டும் சுவைத்திருப்பாய். அதை என்னுடன் முடித்துக்கொள். இனி எதேச்சாதிகாரத் திமிர் கொண்ட வெறியர்களின் இரத்தத்தைக் குடிக்கும் பணியில் ஈடுபடு.

முடிவாகக் கூறுகிறேன். இத்துரைத் தனம், இப்படிப்பட்ட பெருமைப்படத்தக்க சாவை எனக்கு அளிக்காமல், நாடு கடத்தினாலும், வேறு எந்த சித்திரவதை புரிந்தாலும், அண்ணாவின் அற வழியில் நின்று, கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பொன்மொழிகளைக் கடைப்பிடித்து, இறுதிவரை கழகம் வகுத்துத் தரும் போராட்டத் திட்டங்களின்படி ஈடுபடுவேன் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகிறேன்.

பாண்டியன்
சென்னை-24

ப: அவசரச் சட்டம் என்ற இருளில் அரசு நம் கழுத்தை நெறித்தாலும், கூக்குரலிட்டு துணைக்கண்ட அரசின் மீது தாக்க வருபவர்களுக்குக் காட்டிக் கொடுக்கமாட்டோம். நாம் நம் கொள்கைக் கப்பலை நங்கூரம் போட்டு நிறுத்தியிருக்கிறோமேயன்றிஅதை உடைத்து விடவில்லை. நம் 'பிரிவினை'என்ற கத்தியை உறையுள் போட்டிருக்கிறோம். காரணம் நாம் சண்டையிடும் போது குறுக்கே நுழைந்து நம் சகோதரனைக் கொல்ல முயலும் சீனத்தானை முறியடிக்க, பிரிவினைச் சட்டம் வந்தாலும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யோம். பிறர் ஏசினாலும் எங்கள் கொள்கைமடிந்துவிட்டதென்று தூற்றினாலும், கோழைகள் என்று கூக்குரலிட்டாலும் அந்தக் கருங்காலிகளைப் பார்த்துப் புன்னகையுடன் வாளா இருப்போம். போர்ப் புயல் நீங்கினால் அப்போது கிளர்ச்சி தொடங்கும். தி.மு.க. தொண்டர்களின் ரத்தச் சேற்றில் விடுதலைப் பூ மலரும். அன்று, இந்த அரசியல் பிஞ்சுகளைப் பார்த்து நகைக்கும் வரை நாம் மென்முறுவலுடன் இருப்போம். அதுதான் நம் கடமை.

பே. வே. இளங்கோவன்
சித்தூர் (ஆந்திர மாநிலம்)

ப: அண்ணா முடிவு செய்வார்! நான் எதற்கும் தயார்.

மு. சாமிநாதன்
பண்ருட்டி

ப: மாற்றானுக்கு மண்டியிட்டுக்காட்டிக் கொடுத்த வீபீடணனை (சம்பத்) போல் அல்லாமல் நன்றியுடன் இருந்து அறிஞர் அண்ணாவின் தம்பி என்பதை எடுத்துக் காட்ட அவர் ஆணைப்படி நடப்பேன்.

மு. இராமலிங்கன்
குறிஞ்சிப்பாடி.

ப: அண்ணாவின் ஆணையை அமைதியுடன் எதிர்பார்ப்போம். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவர் உள்ளத்திலும், விடுதலை உணர்ச்சியை வீறுகொண்டு எழச் செய்வோம். அண்ணாவின் விடுதலைப் பணிக்காக உயிர் விடவும் தயங்கோம்.

சுப்ரமணியன்,
என். கேசவன்
அண்ணாமலை நகர்

ப: அண்ணாவின் ஆணைப்படி நடப்பேன். தூக்குமேடை என்றாலும் அஞ்சமாட்டேன்.

இரா. மாறன்
சென்னை-18


**வீரகேசரி மாத்திரை**

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதைத் தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது—நற்சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை ரூ. 6—00
50—மாத்திரை ரூ. 12—00

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்

**S. V. R. கண்டர். R. I. M. P.**

அரிசிப்பாளையம். லீ பஜார். P-O (சேலம் - 9.)

பார்த்த படம்

# கலைச்சோலை

பத்மா பிலிம்ஸ்

## நீங்காத நினைவு

அன்னத்திற்குப் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் அன்னம் தண்ணீரை மட்டும் வைத்து விடுமாம். **நீங்காத நினைவு** தண்ணீர் கலந்த பால். ரசிகர்கள் அன்னம் அல்லவே!

காதல் தோல்விதான் கதையின் கரு. '**கல்யாணப் பரி**'சின் சாயல் கொஞ்சம் படிந்து கிடக்கிறது. கல்யாணப் பரிசில் இரண்டு பெண்கள் ஒரு ஆடவனைக் காதலித்து இளையவள் மூத்தவளுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்கிருள். 'நீங்காத நினை'வில் இரண்டு ஆடவர் ஒருத்தியைக் காதலிக்கிருர்கள். பல சிக்கல்களுக்குப் பிறகு முதலில் காதலித்தவன் தியாகம் செய்ய இரண்டாமவன் அவளைத் திருமணம் செய்து கொள்ளுகிருன்.

இடை வேளை வரையிலும் கதை மிக விறுவிறுப்பாக ஓடுகிறது. இடை வேளைக்குப் பின் நின்று போன காரை நாலுபேர் தள்ளிக்கொண்டு போகும் நிலையில் நகருகிறது.

ராஜேந்திரன் படம் முழுவதும் நிறைந்திருக்கிருர். அருமையான சந்தர்ப்பம். பிரமாதமாக நடித்துள்ளார். கண்ணிழந்த இளைஞனை தன்னை ஆதரித்து வரும் பெண்ணுடன் அவர் கபடமின்றி பேசும் போதும் பழகும் போதும்; தன் காதலிக்கு முன்னல் நின்று வெறுமையோடு பாடும் காட்சியிலும், டாக்டருக்காகத் தன் காதலைத் தியாகம் செய்து ஒளி பெற்ற கண்ணை மீண்டும் குருடாக்கிக் கொள்ளும் கட்டத்திலும் ராஜேந்திரன் சிறப்பாக நடித்துள்ளார்.

ராஜேந்திரனை ஆதரிக்கும் கிராமிய ஏழைப் பெண்ணாக வரும் விஜயகுமாரி நன்ருக நடித்துள்ளார். தன்னை மறந்திருப்பவர் நிச்சயம் திரும்பி வருவார் என்று புலம்பிக் கொண்டிருக்கையில் திடீரென அவரே (ராஜேந்திரன்) வந்து நிற்கும் பொழுது அவரைக் கட்டித் தழுவிக்கொண்டு மகிழ்ச்சிகொள்ளும் காட்சியில் விஜயகுமாரி அபாரமாக நடித்துள்ளார்.

புஷ்பலதா-சுதந்திரப் பறவை! ஓடி ஆடி பாடித்திரியும் உல்லாசி, இளமைக் குறும்புத் தனங்களிலும், கனவுகளிலும் மிதந்து கொண்டிருக்கும் பாத்திரம் அவருக்கு. வாலிபச் செழிப்பு கை கொடுக்கிறது. கண்களுக்குக் குளுமை அவர் நடிப்பு.

நகைச்சுவைக்கு நாகேஷ், ராமராவ்; மனோரமா.

குளத்தங்கரையில் மனோரமா புடவை துவைக்க கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு ராமராவ் குரலைச் சாதகம் செய்வதும், அவள் வைத்து விட்டுப் போன புடவையை துண்டில் சுற்றிக் கொண்டு ராமராவ் ஓடுவதும், நாகேசும் ராமராவும் மனோரமாவுக்கு மலர் கொடுக்க இருவர் கொடுத்த மலரையும் வைத்துக் கொண்டு நடக்க - மனோரமா யாரைக் காதலிக்கிருள் என்று தெரிந்துகொள்ள இருவரும் பின்னல் ஓட மலர்க் கூந்தல் திரும்பும்பொழுது அறுபது வயதுக் கிழத்தைக் காட்டுகிருர்களே இந்தக் காட்சிகள் வாய் விட்டுச் சிரிக்கக்கூடிய நல்ல நகைச்சுவை.

சின்னஞ் சிறு மலரே, அன்பு வாழ்க ஆசை வாழ்க ஆகிய பாடல்கள் இனிமையாக இருக்கின்றன.

இயற்கை காட்சியும் அதைப் படமாக்கித் தந்திருக்கும் விதமும் கண்ணுக்கு நல்ல விருந்து.

ராஜேந்திரன் கண் பெறும் காட்சியும், திட்டமிட்டு கல்யாணகுமார் ராஜேந்திரனை அறையும் காட்சியும் உயிரில்லாமல் இருக்கிறது.

மொத்தத்தில் படம் சுவை குறைந்த பால்.

## இளம் ஜோடிகளுக்கு ஏற்ற தியேட்டர்!

கிரேவன்பர்க் என்ற இடத்தில் மோட்டார் காரிலிருந்தபடியே தன் காதலி அல்லது மனைவி, குழந்தை, வளர்க்கும் நாய் இவர்கள் சகிதம் ஆனந்தமாக சினிமாப்படப் பார்க்கும் தியேட்டர் ஏற்படுத்தப்பட்டு சென்ற இரண்டு வருடங்களாக நடைபெற்றுவருகிறது. நாளுக்கு நாள் பேராதரவு அதிகரித்து வருகிறது. ஒரு தடவை இந்த சினிமாவிற்கு வருபவர் மறுமுறை வரத் தவறுவதில்லை. மேற்கு ஜெர்மனியில் இம்மாதிரி திறந்தவெளி தியேட்டர் இதுவே முதலாவதாகும்.

சாதாரணமானசினிமா தியேட்டராக இருந்தால் உள்ளே சிகரெட் பிடிக்கக் கூடாது. நாய்களைக் கொண்டு வரக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் இருக்கும். இந்த திறந்த வெளி சினிமா தியேட்டரில் அம்மாதிரி கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. பின்னல் இருப்பவர் முன் வரிசையிலுள்ள சீமாட்டியிடம் திரை மறைக்கிறது; உங்கள் தொப்பியை எடுங்கள் என்று கேட்கவேண்டிய அவசியமில்லை. படம் பார்த்தது போதும் என்ருல் மோட்டாரைத் திருப்பிக் கொண்டு போய்விடலாம்.

பிராங்க்பர்ட் நகருக்கு அருகாமையில் 20,262 ஏகரா விஸ்தீரணமுள்ள பூமியில் இந்த சினிமா தியேட்டர் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அழகிய காட்சிகள் கொண்ட இயற்கையழகு பொருந்திய இடத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது தனி விசேஷமாகும். எந்த இடத்திலிருந்து பார்த்தாலும் நன்ருகத் தெரியக்கூடியபெரிய ராட்ஷஸதிரைஅமைக்கப்பட்டிருக்கிறது. இத்திரையின் கீழ் ஓரம் தரையிலிருந்து 23 அடி உயரத்திலுள்ளது. இந்த திரையின் பரப்பளவு 645.3 சதுர கஜங்களாகும். இப்பரப்பளவு நிலத்தில்1024 கார்பார்க்செய்யக்கூடிய 'பிளாட்'கள் உள்ளன. ஆடிட்டோரியம் பத்து அரை வட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பார்க் செய்யும் இடத்தைக் காட்டுவதற்காக, ஒலிபரப்பி உஷ்ணப்படுத்தும் சாதனம் இவைகள் கொண்ட ஒரு தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பூமிக்கடியில் இந்தக் கழிபோல் நிற்கும் சாதனங்கள் எல்லாம் ஒன்ருக இணைக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டியை 'பார்க்' செய்தபின் அந்த ஒலிபரப்பியையும் உஷ்ணப்படுத்தும் சாதனத்தையும் வண்டியின் ஜன்னல் வழியாக வண்டிக்குள் வைத்துக்கொள்ளலாம். வண்டிக்குள் கதகதப்பு இதனல் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

நேரம் கழித்து வருபவர்கள் பிறருக்கு இடைஞ்சல் எதுவும் இன்றிவண்டியுடன்வந்து பார்க் செய்து கொள்ளலாம். அதே மாதிரி பாதிக் காட்சியில்போக விரும்புபவர்கள் பிறருக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்காமல் வண்டியை ஓட்டிச் செல்லலாம்.

ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்குமிடையே போதிய இடமிருப்பதால் வண்டியை தாராளமாக ஓட்டிச் செல்லலாம். படம் பார்க்கும்போது பசி எடுத்தால் ஒலி பரப்பியிலுள்ள ஒரு பொத்தானை அழுத்தினல் போதும் உடனே ஒரு ஆள் வந்து வேண்டிய ஆகாரம், ஸாண்ட்விச், கேக்குகள், ஐஸ்கிரீம் எது வேண்டுமோ அவற்றை இருந்த இடத்திலிருந்தே அடையலாம்.

இம்மாதிரி மாபெரும் திறந்த வெளி சினிமா தியேட்டர் ஏற்பட்டது அமெரிக்காவில்தான். அமெரிக்காவில் 20 வயதுக்குட்பட்ட காதல் ஜோடிகளே அதிகமாக இக்காட்சிகளுக்கு வருகிருர்கள். மேற்கு ஜெர்மனியிலும் இளம் காதல் ஜோடிகள் இருக்கின்றனர் என்ருலும் 30 வயதுக்கு முன்புசிறுமோட்டார் வண்டிகூட வைத்துக்கொள்ள அவர்களால் முடிவதில்லை.

மாரி காலத்தைவிட கோடை காலத்தில் இந்ததிறந்தவெளித் தியேட்டர்களுக்கு தங்கள்கார்களில் வருகிருர்கள். இதற்கு செலவும் அப்படியொன்றும்பிரமாதமில்லை. 2.75 ஜெர்மன் மார்க்குகள்தான் ஒரு மோட்டார் வண்டிக்கு.

கேள்வி—2.

### நாங்கள் கேட்கிருேம் நீங்கள் சொல்லுங்கள்!

இத்தனை நாட்களாக நீங்கள் கேள்வி கேட்டீர்கள் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தோம். இப்பொழுது நாங்கள் கேள்வி கேட்கிருேம் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

கேள்வி :

**குடும்பக் கட்டுப்பாடு திட்டம்பற்றி உங்கள் கருத்தென்ன? அதனல் நன்மையா? தீமையா?**

காரணத்தோடு விளக்குங்கள்!

பதில் கட்டுரையாக நீண்டுவிடாமல் சுருக்கமாக இருக்க வேண்டும்.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.